உ
சிவமயம்.
—o—

டி. ஜி. ஜெகநாத நாயுடு, டி. என். சுந்தர ரூவ்
டி. ஏ. இராஜாமணி, ஜெகன்மோகன
குப்புசாமி முதலியார் முதலிய
நாடகக்கம்பெனியார்களால்
பாடி ஆடி வருகிற
நற்குலசேகரி என்னும்

நல்லதங்காள்

சரித்திரம்
முதற்பாகம்.

இஃது
மதுரை டிராமா உபாத்தியாயர்
மகா-ள-ள-ஸ்ரீ
மு. திரு... த்துப் பிள்ளை
...ளாலியற்றி

...துமண்டபம்
...கஷாப்
...பர முதலியார்
...வர்களால்

...மங்கலம்
...ல அச்சியந்திரசாலையில்
...ப்பெற்றது

1914 அணா—2.

...ர் காப்பிரைட்.

OFFICE OF THE ... RAR OF B...
28 ... 1914
M...
IR
IR

உ

சிவமயம்.

—o—

டி. ஜி. ஜெகநாத நாயடு, டி. என். சுந்தர ரௌ

டி. ஏ. இராஜாமணி, ஜெகன்மோகன

குப்புசாமீ முதலியார் முதலிய

நாடக கம்பெனியார்களால்

பாடி ஆடி வருகிற

நற்குலசேகரி என்னும்

OFFICE OF THE REGISTRAR ... 28 OCT 19.. MADRAS

நல்லதங்காள்

சரித்திரம்

முதற்பாகம்

இஃது

மதுரை டிராமா உபாத்தியாயர்

மகா-௱-௱-ஸ்ரீ

மு. திருமலைமுத்துப் பிள்ளை

அவர்களாலியற்றி

மதுரை—புதுமண்டபம்

புத்தகஷாப்

பி. நா. சிதம்பர முதலியார்

அவர்களால்

திருமங்கலம்

ஸ்ரீகிருஷ்ணவிலாஸ அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

இதன் விலை 1914 அணா—2.

உ

சிவமயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் தெரிவிப்பது யாதெனில்.—

டிராமா உபாத்தியாயர் மதுரை மகா-ா-ா-ஸ்ரீ மு. திருமலை முத்துப்பிள்ளையவர்களியற்றிய நற்குலசேகரிஎன்னும்நல்லதங்காள் சரித்திரம் முதற்பாகத்தை மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரம் பி. நா. சிதம்பர முதலியாரவர்களாகிய என்னால் அச்சிட்டு கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்திருப்பதால் மேற்படி புத்தகத்தை அச்சிடவிரும்புவர்களும் அச்சுகூடத்தலைவர்களும் 1887 வரு புது 25-வது ஆக்டின் 20-வது பிரிவில் 6-வது விதியின்படி எம்மால் கோரும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாவும் பினல் கோர்ட்டாரவர்கள் கேள்விக்கு சவாபுதாரிகளாகவு மிருப்பார்களென்று யாவரும் தடையின்றி கவனிப்பீர்களாக.

வள்ளிசுயவரம்.

இப்புத்தகம் வள்ளியம்மையின் பிறப்பும் சுப்பிரமணியர் வள்ளியைக்கல்யாணம் செய்து கழுகுமலையடைந்ததும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது இதில்வள்ளியம்மைஆயாலோட்டித்தினைப் புனம்காப்பதும் நாரதர் அங்குசென்று வாதாடுவதும் மிக்கதமாஷான வர்ணமெட்டுக ளாயிருக்கும் இதற்கிணையான நாடகம் வேறொன்றும்சொல்ல முடியாது. பெரிய புத்தகமாயிருக்கும்

இதன் விலை ரூ 0—10—0

சங்கிலியாபிள்ளை யவர்களியற்றிய புதிய

நீதிநெறி அரிச்சந்திர நாடகம்

இந்நாடகம் முன் அச்சிட்ட நாடகத்தைப்போல கர்நாடகவர்ண மெட்டுகள் காணப்படமாட்டாது எல்லாம் புதியவர்ணமெட்டுகள் சிலதேர்ந்த நாடகக்காரர்கள் வேண்டுகோளின் பேரில் தயாரிக்கப் பெற்றது. விலையும் சொற்பம் இதன் விலை ரூ 1—0—0

இப்படிக்கு

பி. நா. சிதம்பர முதலியார்,

புஸ்தகஷாப், மதுரை.

உ

சிவமயம்.

நற்குலசேகரி என்னும்

நல்லதங்காள் சரித்திரம்.

விநாயகர்துதி.

18009

வெண்பா

பொற்புலவு மாதர் புகழ்குல சேகரியாங்
கற்புயரு நல்லதங்கை காதைசொல—வெற்பின்
மருப்பாற் கதைவரைந்த வள்ளல்கணநாதன்
திருப்பாதங் கொள்வமகத் தே

ஜெயராமா என்ற வர்ணமெட்டு

இராகம்—நாட்டை—தாளம்—ஆதி

பல்லவி

கணநாதா கருணைசெய்
கணநாதா
காதலோடுன் பாதநாளுங் கருதினன் (கண)

அநுபல்லவி

துணையாவா யித்ததி அரண்,
துணையாவா
சூலபாணி பாலனை பரசிவ (கண)

மதவேழ வதனமும்
மதவேழ
வாகுநாளுந் தோணவாகு மிசைவரு (கண)

சதமாகத் திருமலை
சதமாகத்
தாசனேத்து பாசமாவங் குசதர (கண)

கலைமகள்தோத்திரம்

இராகம்—கானடா—தாளம்—ஆதி

கண்ணிகள்

சகல கலாவல்லி சதுர்முகன் பாரி
சாற்றுமென் றமிழ்க்கரு டருவாயிப் பாரில்

புகலவொண்ணுப்பெரும் புகழ்ஞான மூர்த்தி
பொன்னடிதனைத்தினம்போற்றினே னேத்தி

தண்கமலாசனி தாயேபி ராமி
சற்சனர்நாவினிற் றங்கபி ராமி

பண்கவிக் காதரம் பயிலுஞ்சிங் காரி
பாரதி திருமலை பணியுமொய் யாரி

திருவாலவாயென்னும்
மதுரைக் கரசனுகிய நல்லண்ண மகராஜன்
முதலாவதுசபை.

சபைவணக்கம்

வீடலர்ல வாயிலாய் என்றமெட்டு
இராகம்—பியாக்—எகதாளம்

கண்ணிகள்

சந்தமேவு கின்றசோம சுந்தரர்க்கும் வந்தனம்
சங்கரியென் னங்கயற்கண் தாயவட்கு வந்தனம்

அந்தணர் மகான்களாம் அடியவர்க்கு வந்தனம்
அறிஞராயிவ் வவையிலுற்ற பெரியவர்க்கு வந்தனம்

மாசிலாத முத்தமிழ்சொல் வல்லவர்க்கு வந்தனம்
மன்னராமெம் முன்னரான தென்னவர்க்கு வந்தனம்

நல்லதங்காள் சரித்திரம்.

தேசுலாமென் றந்தைதாயர் சேவடிக்கு வந்தனம்
திருமலை மகிழ்ந்துரைத்த செந்தழ்க்கு வந்தனம்

வசனம்.

இத்திருவாலவாயண்ணலாகியசொக்கலிங்கப்பெருமானுக்கும் மாதாவாகிய மீனும்பிகைக்கும் முத்தமிழ் வல்லவித்துவான்கட்கும் அறிவு வொழுக்க முதலியவற்றிற்சிறந்து இவ்வரங்கசபையினிடமாக வீற்றிருக்கும் ஆன்ரோர்க்கும் வந்தனம்.

(ஆசனத்தில்) அரசனமர்தல்.

(மந்திரி வசனம்) அரச! வந்தனம்.

(ரா—ம்) கல்யாண் அமைச்ச ஆசனத்தமரும்

(ம—ம்) உத்திரவு

(ரா—ம்) மந்திரி சாக்ஷாத் காரமாய் விளங்கிய சிவபெருமான் திருவருளினுலும் முற்பகலியற்றிய நற்றவத்தினுலும் கடல்புடை சூழ்ந்த இவ்வுலகின்கண் உத்தம க்ஷத்திரியர் மரபிலுதித்து மனு முறைவழுவாது கைக்கொண்டு தொன்றுதொட்டு வாழையடி வாழையாய் சிம்மாசனத்தி லாரோகணித்துச் செங்கோல்செலுத்திய எனது மூதாதைகள்போல யானும் இச்சிம்மாசனத்திற்குப் பாத்திரனுகி"படைகுடி கூழமைச்சு நட்பரணுறு,முடையானரசருளேறு" என்ற வண்ணம் சேனை, நாடு, பொருள், அமைச்சு, நட்பு, அரண், என்ற ஆறையும் உடையவனுய் அரசருக்குள்ளாக ஆண் சிங்கம் போன்று வருகிறே னன்றோ,

(ம—ம்) ஆம் பிரபு

(ரா—ம்) அவ்வாறுற்ற யான் ராச்சியவிஷயமாய் சிலகேள்விகேட்க விரும்பினன் யாதுதெரிவிக்கின்றீர்.

(ம—ம்) எப்போதுகேட்பீர்க ளென்றெதிர்பார்க்கிறேன்.

தேசவிசாரணை

வேதாகமப்படி என்றமெட்டு

இராகம்—கேதாரம்—தாளம்—ஆதி

கண்ணிகள்

அந்தணர் வேதாகப்படித் தொழிலை
யனுட்டி செய்கின் றாரா?

நந்தமர் சத்ரிய தருமவழாது
நடத்தி வருகின் றாரா?

செட்டொடு வணிகர் தீதின்றிவணிகம்
செய்து வருகின் றாரா?

இட்டமுக்குலத்தா ரேவலைச்சூத்ர
ரியற்றி வருகின் றாரா?

ஆலயந்தோறும் ஆறுகால்பூஜை
யதுவும் நடந்து வருதா?

சாலவேமாத மும்மழைபொழிந்து
தரணி செழித்து வருதா?

(ம—ம்) அரச! நம் முதல் வருணத்தாராகிய பிராமணர்கள் அதிகாலையிலெழுந்து ஸ்நானம்புரிந்து நித்யகருமானுஷ்டானங்களை முடித்து வேதமோது நாவுடையவர்களாயும்,

இரண்டாம் வருணத்தவராகிய க்ஷத்திரியர் ஆயுதம் வில் வித்தைகளிற் றேர்ச்சியுடையவர்களாய் பகைவர்களைச் செயிக்குந் திறமுடையவர்களாய் அமர்காலத்தை யெதிர்பார்த்துக்கொண்டும்,

மூன்றுங் குலத்தவராகிய வைசியர் கொள்முதலுக்குச் சிறிது லாபத்துடன் மோசமிலாது வர்த்தகம்செய்தும்,

நான்காங் குலத்தவராகிய சூத்திரர்கள் மூன்றுவருணத்தாரா லிட்ட ஏவலைப்புரிந்து ஆறிலோர் கடமை நமக்களித்தும் வாழ்ந்து வருகின்றார்கள்.

இதுவன்றி சிவாலயம் விஷ்ணுவாலயங்களில் ஆறுகாலபூ
கள் சரியாய் நடந்து வருகிறது.

நந்தேசத்தில் மழைவருஷித்து செழித்திருப்பதுபோல் மற்
தேசங்களிலும் மாதமும்மாரிபெய்து பிரஜைகள் யாதொரு குறை
வின்றி வாழ்ந்துவருகிறார்கள்.

(ரா—ம்) மந்திரீ! அப்படியா? மிகுந்த சந்தோஷம்.

பிரதான்! எனதுமாதாபிதாக்கள்சரமதிசையின்போது எனது
சகோதரிநல்லதங்கையை நல்லஅரசனுக்கு மணம்புரிந்துகொடுத்து
வேண்டிய வரிசைகளும் செய்வாயென்றுசொல்லி வியோகமடை
தார்கள். அந்நாள்தொட் டிந்நாள்வரை ஓர் அரசராவது பெண்
கேட்டுவரவில்லை, குலசேகரியோ பருவகாலமடைந்து கன்னிகா
மாடத்திலிருக்கிறாள் அதைப்பற்றிமிகவும் வியாகுலமாயிருக்கிறது.

(ம—ம்) அரச! என்செய்யலாம் ஆம்காலம் தானேயாகும்
இதற்கேன்வருந்தல்வேண்டும்?

(ரா—ம்) வாஸ்துவம் வடமதுரையை யரசுபுரியும் எனது
மைத்துனர் காசிபராசனுக்குத் தங்கையை மணம் புரிவிக்கலா
மெனக் கருதியிருக்கிறேன் தெய்வ சம்மத மெவ்விதமோ
அறிகிலேன்.

(ம—ம்) அரச! உள்ளவாறு நடக்கும்.

வடமதுரையை

அரசாண்டுவரும் காசிபராஜன்

முதலாவதுசபை

கவுன சும்தஸிதஸிகரும் என்றமெட்டு

இராகம்—பியாக்—தாளம்—ஏகம்

துக்டா

அதிபதி மகபதியென மதுரையையரா
சாண்டிடு காசிபனும்

மதனனே மானுந ராதிபனும்
மருவலர் மாழ்கவே மோதிபனும்

மாமதி வட்டக்குடை நிழலான்
தாமமணிமுடிசே ரெழிலான்

சம்பிரதாயன் நம்பினர்நேயன்
சற்சனர்மேவிய இச்சபையார்முன்னே

வந்தேன் வந்தேன் வந்தேன் (அதிபதி)

(ஆசனத்தமர்தல்)

(மந்திரி—வசனம்) மணிமுடியரசர் பணிசெயு வேந்தே! வந்தனம்.

(காசிபன்—வசனம்) கல்யாண் அமைச்சசிகாமணி! அமருக.

(ஷை) மந்திரீ! மதுரை மாநகரைப் பரிபாலிக்கும் எனது மைத்துனர் நல்லண்ண மகாராஜாவின் சகோதரி நல்லதங்காளை மணம் புரிய இச்சைகொண்டிருக்கினன் தமதிச்சையாது

(ம—ம்) மகாராஜ்! தங்களுக்கம் எவ்வண்ணமோயானும் அவ்வண்ணமே

(கா—ம்) சந்தோஷம் அவ்விதமானல் இதின்சமாசாரத்தை ...துனர்க்குத் தெரிவித்து பதில்தெரியும்படி செய்யும்.

(ம—ம்) உத்தரவின்படி

(ம—ம்) அடாசேவகா! தூதர்களையழைத்துவா.

(சே—ம்) பிரபு! இதோதூதுவர் வந்துநிற்கிறுர்.

(ம—ம்) அடாதூதுவரே! நமதரசனல்வரைந்த லிகிதத்தை மதுரையை யரசுபுரிந்து வருகிற நல்லண்ண மகாராஜாவினிடம் கொடுத்து அவராற் சொல்லக் கூடிய பதிலைத் தெரிந்துகொண்டு வாருங்கள் (எழுதிய லிகிதம் கொடுத்தல்)

(தூதுவர்—வசனம்) பிரபு உத்திரவு.

தூதுவர் லிகிதம் கொண்டு மதுரையரசன் நல்லண்ணன் சமுகம்வருதல்.

(தூ—ம்) ஐயா சேவகரே! வடமதுரையிலிருந்து காசிபராச அனுப்பப்பட்டதூதுவர் வந்திருக்கிறுர்களெனத் தெரிவியும்.

(சே-ம்) மகாராஜ்! வடமதுரையிலிருந்து காசிபமகாராஜனு லனுப்பப்பட்ட தூதுவர்கள் வந்திருக்கிறுர்கள்.

(ந-ம்) இங்கு வரும்படி சொல்.

(சே-ம்) தூதுவர்கள்! வரும்படி உத்தரவாகிறது.

தூதுவர் அரசனைக் காணல்.

(தூ-ம்) மகாராஜா! வந்தனம்.

(ந-ம்) கல்யாண் தூதர்காள் விசேஷ மென்ன?

(தூ-ம்) இதோ லிகிதம் கொண்டு வந்திருக்கிறோம்.

கொடுக்க மந்திரி வாங்கி வாசித்தல்

அகவல்

என்னுயிர்க்குயிரா யிலங்குமைத்துனராம்
நல்லண்ணனென்ற நராதிபனுக்கு
வடமதுராபுரி மாநகராளும்
காசிபனெழுதுங் கடிதம்யாதெனிலோ
உன்சகோதரியா யுற்றிடுநல்ல
தங்கையையெனக்குத் தனிமணஞ்செய்து
தருவீரென்று தயவுடன்கேட்டுக்
கொள்கின்றனனுல் குணமுடன்பதிலே
உடனனுப்புதலே யுன்னதமாமே.

———

(ம—ம்) பிரபு! தாங்கள் நினைத்தகாரியம் நிறை வேறுங் காலம் சமீபித்தது.

(ந—ம்) மந்திரீ! அதிசந்தோஷம் எனது மைத்துனர்க்கு பதில் கடிதம் ஒப்புக் கொண்டதா யெழுதி யனுப்பும்.

(ம—ம்) அப்படியே செய்கிறேன்.

திருபம் வரைதல்.

(ம—ம்) (கையில் கொடுத்து) தூதுவர்காள்! இந்த நிருபத்தை உங்களரசன்பாலிற் கொடுங்கள்.

(தூ—ம்) உத்திரவு மகாராஜா!

தூதுவர் மீண்டுவந்து காசிபன் சபையில் மந்திரியிடம்கொடுத்தல்.

வாசித்தல்—அகவல்.

திருவடமதுரைத் தேசந்தனையாள்
மன்னனுமெனது மைத்துனராயும்
வழங்கியகாசிப மகராசனுக்கு
நல்லண்ணன்வரைந்த நலமிகுசிருபம்
தாங்களனுப்பிய தனிலிகிதத்தின்
சங்கதியறிந்தேன் றங்கையாம் நல்ல
தங்கையை மனம்போற் சகலருமறிய
மணமுடித்திடவே வருவதில்யாதுந்
தடையொன்றுமிலே சரதமிதாமே.

———

(ம—ம்) மகராஜ்! காரியம் அனுகூலந்தான்.

(கா—ம்) அப்படியா? நல்லது நீர் நமக்குப்பதிலாய் நாமிருந் ரசுபுரிவதுபோல இவ்விராச்சியத்தை பரிபாலனம் செய்யும்யான் சகலாடம்பரங்களுடன் சென்று மதுரையில் நல்லண்ணமகாராஜன் சகோதரியைக் கல்யாணம்செய்து கொண்டு வருகிறேன் விடை தாரும்.

(ம—ம்) அரச! அவ்வண்ணமே செய்கிறேன். சென்று வாருங்கள்.

———

காசிபன் மதுராபுரியை நோக்கி சைன்யங்களுடன் புறப்படல்.

நல்லண்ண மகாராஜன் இரண்டாவது சபை.

(ந—ம்) மந்திரி! நாமெழுதிய கடிதத்தைத் தூதுவர் கொண்டு போய்க்கொடுக்க வாசித்து சங்கதியறிந்திருப்பாரல்லவா?

(ம—ம்) ஆம் பிரபு எப்படியாவது இரண்டுநாளைக்குள்பதில் தெரியும்.

காசிபன் வருதல்.

(கா—ம்) சேவக்! வடமதுரையிலிருந்து காசிபராசன் வந்திருக்கிறுரென்று அரசனிடத்தில் தெரிவித்துவா.

(சே—ம்) மகாராஜா! வடமதுரையிலிருந்து காசிபமகராஜா வந்திருக்கிறுர்.

(ந—ம்) மந்திரீ! நமது மைத்துனர் காசிபன் வந்திருக்கிறுர் வாரும் எதிர் சென்றழைத்து வருவோம்.

(ம—ம்) அப்படியே செய்கிறது.

எதிர்சென்றழைத்தல்.

(ந—ம்) வரவேணும் வரவேணும் மைத்துனரே வாருங்கள் எப்போ நல்லண்ணன் இப்போதுதான் வருகிறேன்.

(ம—ம்) மகாராஜ்! வந்தனம்.

(கா—ம்) கல்யாண் மந்திரீ! சௌக்கியமா?

(ம—ம்) எல்லாம் தங்கள் கிருபையால் சௌக்கியமே.

ஆசனத்தமருதல்

(ந—ம்) அவிடம் யாவரும் க்ஷேமம் தானே?

(கா—ம்) ஆம் இங்குளார்?

(ந—ம்) யாவரும் சுபம்.

(கா—ம்) சந்தோஷம்

(ந—ம்) மந்திரீ! மைத்துனரும் வந்துவிட்டார் இனி கலியாணத்திற்கு வேண்டிய காரியங்களைப்பாரும் சகலதேசஅரசர்கட்கும் திருமுகமனுப்பித்தருவியும் நகரத்தையலங்காரம் செய்யும் அசாக்கிரதையாயிராதீர்.

(ம—ம்) இல்லைமகாராஜ் அதிவிரைவாய் தயாரிக்கின்றேன் பாருங்கள்.

மந்திரி கலியாணத்திற்கு வேண்டியவை யாவும்
சேகரித்து நகரமலங்கரித்தல்.

(ந—ம்) மந்திரீ! சகல அரசர்களும் வந்துவிட்டார்களா?

(ம—ம்) அரசர்கள் யாவரும் வந்துவிட்டார்கள்.

(ந—ம்) வேதியர்கள் வந்திருக்கிறார்களா?

(ம—ம்) அவர்களும் வந்திருக்கிறார்கள் மற்றஎல்லாம் தயார்.

(ந—ம்) சந்தோஷம் சீக்கிரம் தங்கையையலங்காரம் செய்து தாதியரை யழைத்து கொண்டுவரச் செய்யும்.

சகல வைபவத்துடன் கலியாணம் செய்தல்.

இராகம்—கல்யாணி—ஆதிதாளம்

பல்லவி

திருப்—பூட்டினேன் இந்தப்
பொன்னிகர்நல்லதங்கை கன்னிகழுத்திற்றிருப்

அநுபல்லவி

நாட்டினிலுள்ளவரு நகரத்திலுள்ளவருந்
தேட்டமுடனே சூழுந் தெய்வசபைமுந்திருப் (பூட்)

சரணங்கள்

தேசத்தரசர்களுஞ் சேர்ந்தஅமைச்சர்களுஞ்
செந்தீவளர்க்குமறை யந்தணர்களுமற்ற
தாயத்தவருமண்ணன் றம்பியுறமுறையார்
சாட்சியாயுமக்கினி சாட்சியாகவுந்திருப் (பூட்)

பேரிகை மிருதங்கம் பிட்டில்சரமண்டலம்
பிலிதம்பூருவீணை கோலமுரசுதவில்
தூரியம் நாகசுரந் துந்துபிமுதலாகத்
தோந்தோ மெனக்கோஷிக்கச் சுந்தரமங்கலநான் (பூட்)

கல்யாணத்திற்கு வந்த சகலரும் தங்கடங்களிடம் சென்ற பின்னர் காசிபன் நல்லதங்கையோடு அந்தப்புரம்சென்று சிலபகலிருந்துபின் மனைவியைத் தன்னகருக்கழைத்தல்.

(கா—ம்) பெண்ணே! உன்னைக்கல்யாணமுடிக்கும்பொருட்டிங்கனம் வந்தனன் வந்தகாரியமும் நிறைவேறிற்று இனிநம் நகரஞ் செல்லுவோம் உன்னுடையதமையன் முதலோரிடத்திற் சொல்லிக் கொண்டுவா.

(ந—ம்) பிராணேசா! அவ்வண்ணமே செய்கிறேன்.

நல்லதங்கை தன்தமையன் நல்லண்ணனிடம் விடைகேட்குதல்.

தர்க்கம்.

தில் தாரியர்ரிசைலேம்ஸே என்றமெட்டு

நல்லதங்கைசொல்—கண்ணிகள்

எந்தன்மணவாளனுட னேகிவருகின்றேனன்
தந்திடுமுத்தாரந் தயவுடனண்ணா விந்நேரம் (எந்)

நல்லண்ணன்

தங்கையேநீபோய்வா தவறாது சணவனோடே
மங்களமுண்டாக மகிழ்ந்து மகராசியாக (தங்)

நல்லதங்கை

அன்னைதந்தை போலே யென்னை யாதரித்தீ ரிக்காலே
பின்னொருவர்பாலே மணம்பேசித்தந்தீரே பின்னாலே (எந்)

நல்லண்ணன்

உன்கணவன் வார்த்தை யொருக் காலுமறுத்திடாதே
நின்கருத்துப்போலே நிகழ்ந்துகொள்ளுவாரிப்போதே (தங்)

(ந—கை—ம்) அண்ணா! வாஸ்துவம் எவ்வளவு நாளைக்குப் பெண்கள் தாய்தகப்பன் கிரகத்திலிருந்தாலும் பின்னர் ஓர்புருடனை விவாகம் செய்துகொண்டு அவன்வசமிருக்க வேண்டியதவசியமே நமதுதாய்தந்தையர் நம்மைச்சிறுவயதிலே விட்டுவிட்டு சரமதிசை யடைந்தார்கள் அந்நாளிருந்திந்நாள்வரை யவர்களின் எண்ணமே யில்லாதபடி யவர்களைப்போ லாதரித்துத் தகுந்த நாயகனுக்கும் விவாகம்செய்து கொடுத்தீர்கள் அதிலும் ஒர்குறைவில்லை. ஆகிலும் தாங்கள் வெளியே சென்றுள்ளேவரும்போது அம்மாநல்லதங்கா யென்றுவரவும் அதுசமயம் ஏன்அண்ணா வென்றுகேட்கவும்இருந்த வாஞ்சையானது மறக்கும்படியாகிறதே யென்றவருத்தமொன்று மட்டுமெனது நெஞ்சினின் றுருத்திக் கொண்டிருக்கின்றன என்ன செய்வேன் அண்ணா!

(ந—ரா—ம்) தங்கா! மயங்காதே உன்னுடைய பட்டண மானது வெகுதூரமா? நினைத்தால் அடிக்கடி வருவேன்என்யோசிக் கிருய் உனதுபர்த்தாவினது தாய்தந்தையர்தங்கையர்மனம்போல நடந்து புத்திசாலியாயிரு நாயகன்காத்துக் கொண்டிருக்கிருர் சீக்கிரம் செல் உனக்குவேண்டிய சீர்வரிசைகளைப் பின்னாலனுப்பு கிறேன் இங்குள்ளவர்களிடம் பயணம் சொல்லிக்கொள்

(ந—கை—ம்) முன்னமே சொல்லிக்கொண்டேன் அண்ணு! அண்ணு!

வெண்பா.

குலமகட்குத்தெய்வங் கொழுநனே மன்றப்
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்—அறவோர்க்
கடிகளேதெய்வ மனேவோர்க்குந் தெய்வம்
இலேமுகப்பைம்பூ ணிறை.

என்றநீதிநூல் முதலியதும், கணவனுக்கு மனேவிநடக்கு வித மும், மற்றோர்க்கு நடக்கு மொழுங்கமும் வாசித்திருக்கிறேன். ஆயினும்(பேதமையென்பது மாதர்க்கணிகலன்)யென்ற பழமொழி யொன்று பிரத்தியச்சமாய்க் காணுகிறதல்லவா? ஆனதால் இவ் வளவு சொன்னேன் நல்லது போய் வருகிறேன்.

(ந—ரா—ம்) நல்லது சென்றுவா.

(கா—ம்) மைத்துனரே போய்வருகிறேன்.

(ந—ரா—ம்) நல்லது சுகமாய் சென்று வாருங்கள்.

காசியன் வடமதுரைக்கு நல்லதங்காளுடன் வந்து சுகமா யிருக்குங்கால் நல்லதங்காள் ஏழ்புதல்வர்களைப்பெற்று வாழ்ந்து வந்தனர் பின்னர் பனிரண்டுவருடம் மழைபெய்யாது மாறினதால் குடிகள் அரசனிடம் வந்துமுறையிடல்.

ஆனந்தக்களிப்பு

இராகம்—நாதநாமகிரியை—அடதாளம்.

கண்ணிகள்

கனமான வடமதிரை மன்ன எங்கள்
கஷ்டங்களுங்களிடங் கழறுவோ மிந்நாள்

பனிரண்டு வருஷத்துப் பஞ்சம் அதால்
பட்டதைச் சொல்லுதற்காமோ கொஞ்சம்

மழைபெய்ய இல்லாமற் போச்சு மேலே
வானத்தைப் பார்த்துமயங்கிட லாச்சு

பழையதானிய மெலரந் தின்றோம் வேறு
பசையில்லைப் பசியாகிப் பாரிலே நின்றோம்

மாடாடுகட்கிரை யில்லை மெத்த
வாதனையாலதுமெலிந்ததே தொல்லை

வீடாய்நிலங்களை வைத்தோம் ஒன்று
மில்லையேயினிவைக்கஎன்செய்வமெய்த்தோம்

உள்ளதையுரியதை விற்றோம் கையி
லோட்டாண்டியாகியேநின்சமுக முற்றோம்

தள்ளாமற் காப்பாற்று மையா நீர்
தாங்கவிட்டால் வேறேஊர்போறோ மெய்யா

(ரா—ம்) மந்திரீ! என்ன வெளியி லிரைச்சல்?

(ம—ம்) அடா சேவகா! வெளியே யென்னசத்தம்?

(சே—ம்) மகாரஜ்! குடிகள் வந்திருக்கிறார்கள்.

(ரா—ம்) வரச்சொல்.

(குடிகள்—வசனம்) ஐயா மகாராஜாவே! பனிரண்டுவருஷத்துப் பஞ்சத்தால் பட்டபாடுகளைச்சொல்லி முடியாது எங்கள்நிலைமைகளைப் பாருங்கையா.

(ரா—ம்) குடிகளே! மயங்காதீர்கள்.

ஷை மந்திரீ! நமது தானியகளஞ்சியத்தையும் பொக்கிஷசாலையையுந் திறந்துவிட்டுக் குடிகள் மனம் போலக் கொண்டு போகச்செய்யும்.

(ம—ம்) நல்லதுத்தரவு ஏ குடிகாள்! உங்கள் மனம்போல் அரண்மனையினுள்ளே போய் வேண்டியவைகளை யெடுத்துச் செல்லுங்கள்.

(கு—ம்). அப்படியே செய்கிறோ மையா.

குடிகள்வேண்டியவைகளை யெடுத்துச்செல்லுதல்

காசிபன்பஞ்சக் கொடுமையை மனைவியிடம் சொல்லல்.

வந்தவேளை யிது நல்லவேளை என்றமெட்டு.

இராகம்—பியாக்—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

காரிகையே பஞ்சகாலம் வந்ததாலே
கட்டபட்டே குடியானவர்கள்

நேரின்முறைசெய்யக் கேட்டேயன்னோர்குறை
நீக்கத்துணிந்தே தயையுடனே

நம்முடைய சமஸ்தானக்களஞ்சிய
நன்னவ தான்யந்திரவியமுஞ்

சும்மாஅள்ளிக்கொண்டு போருங்களென்றே நான்
சொல்லியே தானமிகப் புரிந்தேன்.

(ரா—ம்) பெண்ணே! கேட்டனையா? பஞ்சக்கொடுமையினால் பிரஜைகள் கட்டப்பட்டு நம்முன் முறையிட்டமையால் களஞ்சியத்தையும் பொக்கிஷ சாலையையுந் திறந்துவிட்டு உங்கள் மனம்போல் அள்ளிக்கொண்டு போருங்களெனத் தானம்புரிந்தனன்.

(ந—ம்) பிராணேசா! செய்யவேண்டியதுதான்.

அதிகப் பஞ்சம் வந்துவிட்டமையால் நல்லதங்கை தமையன் வீட்டுக்கு போய்வருவோமென்று தன் புருஷனைக் கூப்பிடல்.

தும்பினமேரி—என்ற மெட்டு.

இராகம்—பியாக்—தாளம்—ஆதி.

கண்ணிகள்

தமையனார் வீடு தான்சென்று வருவோந்
தனையரு நாமுமிப்பொழுதே

அமைவுடன் சிலநாளங்கிருந்துபஞ்ச
மகன்றபின் வருதல் நலமாகும்.

(ந—ம்) பிராணபதி! எனது தமையனார் நகரஞ்சென்று சில பகலங்கிருந்து பஞ்சகாலந்தெளிந்தவுடன் இங்குவரலாம் தனையர்களுடன் தாங்களும் புறப்படுங்கள்.

(ரா—ம்) நங்காய்! என்னவார்த்தை சொல்லுகின்றாய்? பஞ்ச காலமாவது தமையனார்வீடாவது அது எங்கேவந்தது என்ன வந்தாலும் இவ்விடத்தை விட்டுச்செல்லுவது பிரயோசனமில்லை.

(ந—ம்) நாதா! என்செய்யலாம்? பஞ்சமோ மகாகொடியதாயிருக்கிறது குழந்தைகுட்டிகளோ பட்டினியும்பசியுமாயிருக்கிறது ஆனதால் தாங்கள்வாராவிட்டாலும் குழந்தைகளும் யானுமாவது போவதற்குவிடைதாருங்கள்.

எங்கள் தூறக்குலந்தனக்கு என்ற மெட்டு.

இராகம்-பிலஹரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அண்ணான்வீடு செல்வதழ கல்லவேயிக் காலமதிற்பெண்ணே
உன—தெண்ணமிவ்வளவுதானோ எனினைத்துப் பார்க்கவில்லை
கண்ணே.

நல்லதங்கை.

என்னுடை தமையன்வீட்டுக் கேகுவதிலென்னகுற்றம் நாதா
வேறே—யின்னொருவர் வீடு சென்று லேழமையுண்டாகுந்
தெரியாதா.

காசிபன்.

யாவர்வீடானபோதிலுஞ் சாமகாலமென்பதரியாயா—மெத்தக்
கேவலமாயொன்றுமில்லை யோவென்பதா யெண்ணுவர் பார்
நீயா.

நல்லதங்கை.

அப்படிநீர் நினையாதீ ரண்ணன்கேவலமா யெண்ணிடாரே
இனி—எப்படியும் பிள்ளைகுட்டி யென்னையுமாதரித்திடுவாரே.

காசிபன்.

பெற்ற தாய்தந்தையருற்றால் பிள்ளையினருமையறிவாரே
யன்றி—மற்றவர்க்கென்னருமண்ணன் மனைவி யறிவாளோ
நீ பாரே

நல்லதங்கை.

தமையனுடமனைவி தாயினுமருமையுடையாளே—யாகும்
எமையாதரித்துமன மெப்படியோ அப்படிச்செய்வாளே.

வசனம்

நாதா! எல்லவரையும் போல என் அண்ணனையும் மதினியாரையு மெண்ணவேண்டாம், தன்னுயிர்போல. என்னையும் என்குழந்தையையும் இரட்சிப்பார்கள் சந்தேகமில்லை விடைதரவேண்டும்.

(கா—ம்) சகி! எவ்வளவோசொன்னேன் அவைகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லுகின்றாய் ஆனால்சரி குழந்தைகளுக்குத் துன்பம்வராமல் பாதுகாக்கவேண்டும், ஆபத்தேதேனுநேருமாகில் யென்னுயிரையுமாய்த்துக்கொள்வேன் ஞாபகம்.

(ந—ம்) பிராணபதி! அப்படி ஒன்றும்வரமாட்டாது.

(கா—ம்) நல்லது புறப்படு. சிறிதுதூரம் வழியனுப்புகிறேன்.

———

அங்கயற் கண்ணிமணவாளா—என்றமெட்டு

இராகம்—செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

கண்ணிகள்.

மங்கையேபோய்வருகு வாயே பெற்ற
மைந்தர்களுடனேயன் பாயே
மங்களஞ் செய்தநாளி ருந்திந்தநாள்வரையு
மாபாவியெனைவிட்டு நீபிரிந்ததில்லையே.

மெத்தவுநாளிருந்தி டாதே நல்ல
உத்தமகுணமாறி டாதே
பத்திரமாநடந்து பாதைதனைக்கடந்துன்
கைத்தலத்தால் வரைந்து கடிதமனுப்புவாயே.

வசனம்.

பெண்ணே! சென்றுவருகின்றாயா?

(ந—ம்) நாதா! பலவாறுயோசிக்கவேண்டாம் போனஉடன் சிலதிரவியஞ் சேகரித்துக்கொண்டு சீக்கிரம்திரும்பிவிடுகிறேன்.

———

காசிபன் வழியனுப்பும்போது அபசகுனங்கண்டு துயரடைதல்,

அடியன் சொல்வதைக் கேளா என்றமெட்டு.

தர்க்கம்.

இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—சாப்பு.

கண்ணிகள்

காணு அபசகுனங் காணுதே மாதே
வீணுகச்செலவேண்டா மீள்வாயிப் போதே

நல்லதங்கை.

வள்ளலேவைக்காதீர் மனத்தையந் தானே
உள்ளபடியிருக்கும் யோசிப்ப தேனே

காசிபன்.

காகம்வழிவிடாமற் கட்டுதே பாராய்
போகவேண்டாந்திரும்பிப் பூவையே வாராய்

நல்லதங்கை.

ஈதென்னபறவாம லிருக்குமோர் காகம்
நீதென்னவரப்போகுஞ் செய்யாதீர் சோகம்

காசிபன்.

எண்ணெய்சுமந்து செக்கா னெதிரேவா ரானே
எண்ணிப்பாரது பின்னுமேகுவ தேனே

நல்லதங்கை.

வாணிபஞ்செய்வதற்கு வருகிறுன் பாதை
நீணிலத்திவையெல்லா நினைக்கிலு பாதை

காசிபன்.

மொட்டைப்பிராமணத்தி முன்னேவா ராளே
சட்டைபண்ணுமற்போனுற் ருழ்வுண்டு கேளே

நல்லதங்கை.

நாமிங்குவருஞ்செய்தி நன்கறிந் தாளோ
தாமெங்கும் போகாமலே தரித்திடு வாளோ.

(கா—ம்) பெண்பாவா! நீ பயணமாகிப் புறப்படும்போது எவ்வளவோ அபசகுனம் காணுகிறது, அவையெல்லாங்கூடாதென் றுரைத்தால் எல்லாந்தெரிந்தவள் போல்சமாதானம் சொல்கின்றாய் கெடுமதி கண்ணுக்குத்தோற்றுமா? தோற்றாது நல்லதுமனம்போல் சென்றுவா. இன்னும்கொஞ்சத்தூரம் வருகிறேன்.

(ந—ம்) பிராணேசா! தாங்கள்சொல்லுவ தாச்சரியம் காகம் பறவாமலும், எண்ணெய்க்காரன் வியாபாரம் செய்யப்போ காமலும், வீடுவிட்டுவீடு மனிதர்போகாமலும், தும்மாமலும், இரு மாமலும், இருக்கமுடியுமா? நாம் வரும்செய்தி யறிந்தால் அப்படி யே யடங்கியிருக்கும் அப்படியில்லையே சந்தேகம்வேண்டாம் சந்தோ ஷமாய் அனுப்புங்கள்.

விருத்தம்.

கோதையே யுனையுமிந்தக் குழந்தைகடனையும்பஞ் ச
வாதையால் பிரிந்தெவ்வாறு மாநிலமீதுவாழ்வே ன்
ஊதையும் வெயிலுந்தாக்கா துள்மனையிருந்தநீயெ ப்
பாதையைக்கண்டு செல்வாய்ப் பதனமாய்ப் போய்வாவின்றே.

(வ—ம்) பிராணசுந்தரி! இனிமேல் நினைத்துப் புலம்புவதில் பிரயோசனமில்லை சென்றுவா.

(ந—ம்) நாதா! வருந்த வேண்டாம் திரும்பிச் செல்லுங்கள் சீக்கிரம் வந்துசேருகிறேன் வந்தனம்.

(ரா—ம்) கல்யாண் சென்றுவா காதலீ!

(குழந்தைகள்) பிதா! யாங்களும் சென்றுவருகிறோம்.

(ரா—ம்) என்கண்மணி குழந்தைகாள்! உங்கள் தாயாரை யிணைபிரியாது கூடவேசென்றுவாருங்கள்.

நல்லதங்கை வனத்திற் பிரவேசித்தல்

தாயையும் விட்டுத் தனித்திருந்தால் என்ற மெட்டு.

இராகம்—தோடி—தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

வேகமாய்நடந்து வாருங்கள் பாலர்காள்
வெய்யலுஞ் சாஸ்தியாய்ப் போச்சே

நாகாபரணன்செயலோ விங்கிப்படி
நம்மையுஞ்சோதிக்க லாச்சே

குணசீலன்.

அம்மணியேயிந்த ஆரண்யந்தன்னிலே
யாகாச்சகுனத்தைப் பாராய்
இம்மாமீதிலோ ராந்தைகலகலென்
றென்னவோசொல்லுதே நேராய்

நல்லதங்கை.

சோடிழந்தபட்சி கூப்பிடுகின்றதால்
துற்சகுனமோடா பாலா
வீடிருந்துவெளியேறிவிட்டாற்பார்க்க
வேண்டாமடாகுண சீலா

குணசீலன்.

பாம்புநரியுங் குறுக்காகவோடுது
பல்லிசொல்லவலங் கேளே
நாம்பிரயாணமாய் வந்ததுநேரமோ
நன்றாயில்லையிந்த நாளே

நல்லதங்கை.

காடாயிருப்பதி னாலதன்பாட்டுக்குக்
கண்டபக்கமெல்லா மோடி
தேடியிரைக்குச் செல்கின்றதைப்பார்த்துத்
தியங்காதடாமனம் வாடி

குணசீலன்.

என்னசொன்னாலு மனஞ்சமாதானமே
யெள்ளளவுமில்லை தாயே
என்னையன்வீடுசெல் கின்றோம்நீ உன்னண்ணன்
இல்லம் சென்றுவரு வாயே.

(வ—ம்) அம்மா! வருகிறவழியில் அபசகுனங்களாய்க்காணு கிறது அதனாலென்ன தீங்குநேரிடுமோவென்ற ஏக்கமே பெரிதா

யிருக்கிறபடியால், நீமட்டு மாமா வீடுசென்று பொருள்சேகரித்துக் கொண்டுவா நாங்கள் பிதாவிடம் சேருகிறோம்.

(ந-ம்) அடாபாலகா! வனத்தினிடமாக வசிக்கும் பறவை மிருகமுதலிய ஜெந்துக்கள் இரைதேடும்பொருட்டு வெளியேபுறப் பட்டால், இவைகளெல்லாம் ஓர் சகுனமாகுமா? பயப்படாதீர்கள் தொடர்ந்துவாருங்கள் எல்லாம் ஜெகதீசனிருக்கிறார்.

குழந்தைகள் பசியால் வருந்துதல்.

தனசீலன் சொல்லும் தரு.

திருமால் மருமகனே என்றமெட்டு.

இராகம்—காப்பி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

களைப்பாய்வரு குதம்மா என்றன்
கால்களப ருதம்மா இந்தக்
கானகத்தி லேதொடர்ந்து நானெப்படி யாய்நடப்பேன்.

இளைப்பாருதே தேக நா
னென்செய்வே னநேக தூரம்
எட்டிநடந் தேவந்திட்ட கட்டம்சகிக் கவில்லையே.

அடியால் கீழே மிதிக்கும் பொழு
தனலாகவே கொதிக்கு தையோ
ஆரிட முறையிடுவேன் பாரிடங்கள் சூழ்வனத்தில்.

முடியாதினி நடக்க சற்றே
முன்வாவெனை யெடுக்க பெரு
மூச்சுசிறு மூச்செடுக்க லாச்சிருக்க நிழலில்லை. (க)

(வ-ம்) அம்மா! இனிமேல் நடக்க முடியாது சற்றே தூக்கிக்கொள்.

நல்லதங்காள் சொல்லல்.

நாமழகமது மூஸ்தபாமனு என்றமெட்டு.

இராகம்—பியாக்—அடதாளம்—சாப்பு.

பல்லவி.

சற்றேநடந்து வாருங்கள் தூக்கித்
தானெடுத்தேகுறேன். (சற்)

அநுபல்லவி.

முற்றுதகாலால் மெத்தநடக்க
முன்செய்ததீவினையோ இனி (சற்)

சரணம்.

வீட்டுக்குவாசல் விளையாடும் போதே
மெல்லியகால் நோகும் பின்னிக்
காட்டில் நடக்க தாட்டிக மாமோ
கஷ்டமேஉண் டாகும் இனி (சற்)

வசனம்.

பாலர்காள்! நீங்கள் வீட்டிலிருந்து வாசல் வரை நடந்துவருவதற்குப் பாதங்கள் சிவந்துநோகுமென்றால், வெப்பம்பொருந்திய இக்காட்டில் நடக்கச்சகிக்குமா? என்செய்யலாம் கொஞ்சத்தூரம் நடந்துவாருங்கள் தூக்கிக்கொள்கிறேன்.

மைந்தன் சொல்லல்.

காசிநாதா இதுவுமுன்றன் என்றமெட்டு.

இராகம்—ஸ்ரீராகம்—ஆதிதாளம்.

கண்ணிகள்.

அம்மா பசிபொறுக்க மாட்டேன் யென
தம்மா பசிபொறுக்க மாட்டேன்

தாய்.

அழுகாதடாகிழே விழுகாதடா வனப்
பழவருக்கம் பறித்துப் புசிக்கத்தருகிறண்டா

பல்லவி.

பையநடந்துவாடா பாலா.

பிள்ளை.

தாகமெடுக்குதென்ன செய்வேன் மெத்தத்
தாகமெடுக்குதென்ன செய்வேன்

தாய்.

தண்ணீரதோபாராய் கண்ணுக்குத்தோற்றுது
உண்ணும்படியாயள்ளி யுனக்குத்தருகிறண்டா (பை)

பிள்ளை.

மெத்தக் கடுக்குதென்றன் கால்கள் ஐயோ
மெத்தக் கடுக்குதென்றன் கால்கள்

தாய்.

மெல்லடியைப் பெயர்த்துப் புல்லின்மேலேமிதித்தால்
கல்லுமுருத்திடாது நல்லவழியுமாகும் (பை)

பிள்ளை.

என்னைமட்டு மிடுப்பில் தூக்கு சற்றே
என்னைமட்டு மிடுப்பில் தூக்கு

தாய்.

ஏங்காதடா பின்னல் வாங்காதடா உன்னைப்
பாங்காகஇடுப்பிலே தாங்குறண்டாவினிப் (பை)

(வ-ம்) அப்பா குழந்தாய்! இன்னும்கொஞ்சத்தூரம் நடந்துவா அப்புறம் தூக்கிக்கொள்கிறேன்.

(பி-ம்) அம்மா! தூக்கிக்கொள்கிறேன் தூக்கிக்கொள்கிறேனென்றேய்க்குறாய் என்னால் கொஞ்சமு நடக்கமுடியாது தவிரவும்,

---

பாலா யென்னகாலம் வந்ததடா யென்றமெட்டு.

இராகம்.

பல்லவி.

தாயேபசியாகுதே யென்னசெய்வேனே
பினி நானே

அநுபல்லவி.

சாதந்தந் தாயில்லைத் தண்ணீர் தந்தாயில்லைப்
பாதைநடக்கவோ பாதம் வருதில்லை (தா)

சரணம்.

காயேனுங்கனியாகிலுந் தின்றால் தானே
நடப் பேனே
காலுந்தள்ளாடுது கண்களும் சோருது
காதடைப்பாகிக் கருத்து மருளுது (தா)

(வ—ம்) அம்மா! கிறு கிறென்றுவருது நடக்கமுடியுதில்லை பசியோஅகோரமாயிருக்கிறது என்செய்வேன்.

நல்லதங்கை சொல் விருத்தம்.

பைந்தொடிநான் பொற்கலத்திற் பாற்சோறு
பிசைந்தூட்டப் பாலா வாடா
இந்தா நீ கொஞ்சமுண்ணு விக்காமற்
குடிபாலை யென்றபொழுது
தொந்திரவு பண்ணாதே வேண்டாம் போ
பசியில்லை ஜோலிபாரென்
றந்தநாள் சொன்னகுற்றம் அநுபவிக்க
விவ்வனத்தி லலைகின்றாயோ?

(வ—ம்) அப்பா குழந்தாய்! நகரத்தில் நம்மரண்மனை நிலா முற்றத்தில் பொற்பாத்திரத்தில் பாலும் சோறும் பிசைந்துவைத்துக்கொண்டு உண்ணுவாடா மகனே யென் றழைக்கும்போது வேண்டாம்பசியில்லை அப்புறமாகட்டும் இப்போதுமாட்டேனென் றோடின தோஷமோ இவ்வனத்திற் றுணைப்பசிக்குது சாதம்கொடு வென்றுகேட்குறாய் ஐயோ! இதுவுமொரு காலந்தான்.

ஐயோ வென்சானகியை என்றமெட்டு.

இராகம்—முகாரி—தாளம்—சாப்பு.

கண்ணிகள்.

ஐயா வென் பாலர்களே அப்பாவென் பாலர்களே
அடவியிலென் செய்வேண்டா

செய்யாத வநியாயஞ்செய்தேனே முற்பிறப்பிற்
சேயிழையறியேனே
பிச்சைக்குவந்தவரை பின்னேவாவென்றடித்துப்
பேசினேனே சினமாய்
பச்சைக்குழந்தைகட்குப் பாலில்லை யென்றேனேஅப்
பாவமோயானறியேன்.

(வ-ம்) பாலர்காள்! அறம் முப்பத்திரண்டில்:— பிச்சை, அநாதருக்கன்னங்கொடுத்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல் தண்ணீர்பந்தல் வைத்தல் ஆகிய குறிப்பிட்ட இத்தருமங்கட்கு விரோதமாய் நடந்தேனே? அப்படிச்செய்தபாவம் என்னையல்லவா பிடிக்கவேணும் உங்களை வருத்துகின்றதே. செய்ததீவினை செய்தவர்க்கெய்திடுமென்ற பழமொழியும் பொய்யாயிற்றே ஐயோ என் செய்வேன் நகரும் பக்கத்திலில்லையே.

பிள்ளைகள் சொல்லுதல்.

மாதவமே யிவ்வுருவா என்றமெட்டு.

இராகம்—எதுகுலக்காம்போதி—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

என்னபவம்செய்தனமோ இவ்வனத்தில் வாடுகின்றோம்
அன்னையே யுன்மே லாவலாதிசொல்ல
லாகுமோவெங்கள் தலையிலெழுத்தாகும்
சாதமில்லை யாயிடினுஞ் சாப்பிடத் தண்ணீருமில்லை
ஆதரவாக அரண்மனையிலே
யாங்களிருந்தா லவதியடைவமோ (எ)

(வ-ம்) அம்மா! யாங்கள் செய்தவினைக்கு உன்மீதுவருத்தப் படலாகுமா? இந்தவனத்தில் பசியாலும் தாகத்தாலும் அலையும்படி பிராப்தியிருக்க வேறொருவரை நோவதுஅறிவீனம் உன்கூடவராம லரண்மனையிலிருந்தா லிவ்வவஸ்தை யடைவோமா?

கடைசிக்குழந்தை கேட்குதல் தர்க்கம்.

எனக்கோரு விதமானமயக்க மேலாகுதையோ யென்றமெட்டு.

இராகம்

கண்ணிகள்.

குழந்தை.

குடிக்கத்தண்ணீருமில்லைக்
கொதிக்கிறதேவயிறு

தாய்.

சடைக்காதடாவுனக்குத் தண்ணீ ரெடுத்துவந்து
தருகிறேண்டா—தருகிறேண்டா குடிக்கத் தருகிறேண்டா

குழந்தை.

பசிக்குததிகமாகப்
பாலகிலுங்கொடம்மா

தாய்.

பவ்வியமுடன் படர்ந்த கொவ்வைக்கனிகள் மெத்த
பறித்துத்தாரேன் பறித்துதாரேன் கனிகள்பறித்துத் தாரேன்

குழந்தை.

துடிக்கும்படியென்காலிற்
சூடேறுதென்னசெய்வேன்

தாய்.

சுருக்காய் நடந்துவாடா சோர்ந்து நில்லாதே யிப்போ
தூக்குறேண்டா தூக்குறேண்டா இடுப்பிலே தூக்குறேண்டா

(வ—ம்) அடாசெல்வக் குழந்தாய்! தண்ணீரும் தருகிறேன் இதோ படர்ந்திருக்கிறது கொவ்வைக்கனிகள் அதையும் பறித்துத்தருகிறேன் பசியாறிக்கொண்டு சீக்கிரம் நடந்துவா தூக்கிக் கொள்கிறேன்.

(கு—ம்) அம்மா! அது எனக்குவேண்டாம் பாலூற்றி பிசைந்தசோறு கொஞ்சம்கொடு. (தானே) ஐயோ மூலைச்சுத்தறியுமா

சகலேப்பிள்ளை என்றபழமொழி சரியாயிருக்கிறது. வழியில்இரண்டு நாளாய் பாதைதெரியாமலலேந்து கொண்டுதிரிகிறேம் அதெல்லாம் தெரியாமல் பால்சோறுகேட்கிறதே. ஆ சிவனேஇதுஉன்செயலோ (வெளிப்பட) குழந்தாய்! நம் மாமனூருக்குப் போனவுடன் பாலும் சோறும் தருகிறேண்டா அழுகாமல் வா.

(குழந்தைக்குக் கொவ்வைப் பழத்தைப் பறித்துத்தர அது தின்றவுடன் ஓங்கரிப்புண்டாகிச் சொல்லுதல்)

ஆர்காணும் நீர்சிலேவேடரே என்றமெட்டு.

இராகம்—காம்போதி—அடதாளம்.

கண்ணிகள்.

கொவ்வைக்கனியை வெறுவயிற்றிற்றின்ற
குற்றமோ வென்றன் குடலேப்புரட்டுது
ஒவ்வவிலேமன மோங்கரிப்பாகுதே
ஓகோவிதுவென்ன ஆகாதகாலமோ. (கொ)

சாதம் புசிக்கிற்றயிரிய மாய்விடுந்
தங்கிடவில்லேயேல் நொந்திடத்தான்வரும்
பாதம்படக்கீழே வேதனையாகுது
பைய நீ தோண்மீது நையாமற்றூக்கிக்கொள் (கொ)

(வ—ம்) அம்மா! என்னவோ பழத்தைப் பறித்துக் கொடுத்தாய் அதைவெறுவயிற்றில்தின்றவுடன் குடரைப்புரட்டிக்கொண்டு வாந்திபண்ணவருகிறது, கீழயோ சால்பாவமுடியவில்லே சற்றே உன் தோள்மீது தூக்கிக்கொள்.

(ந—ம்) கண்மணி! இதோ உட்கார்ந்தேன் தோள் மீதிலேறிக்கொள்.

(பொது) குழந்தையைத் தோண் மீதிலேற்றிக் கொண்டு செல்லும்போது பாதைகாணுமல் வருந்தி மான் மரை பறவை விருட்சங் களைப் பார்த்துக் கேட்குதல்,

மானேபிடியே என்றமெட்டு.

இராகம்—பியாக்—அடதாளம்.

கண்ணிகள்.

மானேமரையேமாதங்கமே சிங்கமே
மாமதுரைவழி காட்டுவீர்
கானகமானதாற்பாதை தவறினேன்
கன்னிநானன்புபா ராட்டுவீர்
மாடப்புருவேமயிலே குயிலேயெம்
மாமதுரைவழி சாற்றுவீர்
தேடித்திரிந்துதியங்கி மயங்குறேன்
சேயிழையென்மனந் தேற்றுவீர்
மாவேபுளியேமருதமே வன்னியே
மாமதுரைக்கேகு மார்க்கமே
பூவைநான்கேட்கிறதாலே புகலுவீர்
புண்யமாம்பின்னுங்கள் நோக்கமே
வாசமலரின்வண்டேகரு மேகமே
மாமதுரைவழி சொல்லுவீர்
பேசரியமைந்தரோடே யலைகுறேன்
பின்னும்மினத்துடன் புல்லுவீர்

(வ—ம்) ஆ! ஆ! இவ்வனவாசிகளாகிய மான் மரைகாள்! மயில் குயில்காள்! தாவரமாய் நிற்கும் தனிமரங்காள்! வாசமலர்த் தேனுண்ணும்வண்டினங்காள்! குளிர்ந்தசோலை மேற்படியுங்கொண் டல்காள்! மதுரைக்குச் செல்லுகின்ற வழியைத்தவறவிட்டு மைந் தரைக்கூட்டிக் கொண்டலைகின்றேன் மனமிரங்கி நீங்களாவது வழியைக் காண்பிக்க லாகாதா? ஐயோ தெற்குவடக்குத் தெரி யாமல் விழிக்கின்றேனே யென்செய்வேன்.

(கு—ம்) அம்மா! சூரியனஸ்தமிக்கப்போகின்றான் இவ்வனத் திற்றங்கி விடிந்தவுடன் செல்லுவோம். மிருகங்கள் சப்தமோ காது கேட்கிறது பயமாகவுமிருக்கிறதே யென்செய்வோம்.

கானகத்தில் நானலைந்து என்ற மெட்டு.

இராகம்—தேசிகமுகாரி—தாளம்—ரூபகம்.

குழந்தைகள்—கண்ணிகள்.

சிங்கமொடு யானைபுலி சீறுமொலி கேட்டிடுவாய்
தங்கியோர் புறமிருந்து தான்விடிய ஏகிடலாம்.

தாய்.

ஆர்த்தெழும் விலங்கினங்க ளாரையென்ன செய்யுநமைப்
பார்த்தவுடனேபயந்து பதறியே யோடிவிடும்.

கு—ள்

சூரியன்மறையுமுன்னே சோலைக்கனி கொய்திடுவோங்
காரிருளுமூடிவிட்டாற் காய்கனிகள் தோற்றிடாது.

தாய்.

நல்லதென்றன் சேயர்களே நானப்படியே செய்குறேன்
மெல்லஇந்த வனம்விட்டு வேறுவனஞ் சென்றிடலாம்.

(வ—ம்) மைந்தர்காள்! இன்னுங்கொஞ்சம் வெளிச்சமிருக்கிற திருல் இவ்வனத்தைவிட்டு அடுத்தவனம் சென்றிடலாம்.

(கு—ம்) நல்லது இருட்டுமுன் நல்லகனிகள் பறித்துவா.

நல்லதங்கை குழந்தைகளுக்கு கனிகள் பறித்துக்கொடுத்துப் பசியாற்றி இரவில்வனத்திற்றங்கி விடிந்தவுடன்புறப்படல்.

(யூகசீலன்வசனம்) அம்மா! இன்னும் எவ்வளவு தூரமிருக் கிறது? வந்துவிட்டோம் வந்துவிட்டோமென்று ஏமாற்றி யிவ்வள வுதூரம் அழைத்துக்கொண்டுவந்து விட்டாயே உள்ளதைச் சொல் கால்களெல்லாம் நோகிறது.

(க—ம்) அடாபாலர்காள்! இதோசமீபத்தில்வந்து விட்டோம் மதுரைமீனுக்ஷியம்மன் கோபுரம் அதோதெறிகிறது பாருங்கள். இன்னும்சமீபத்தில் சென்ருல் உங்கள் மாமன்வீட்டு மேல்மாடியும் தெரியும் சீக்கிரம் வாருங்கள்.

———

வழிதெரியாது நல்லதங்காள் கடவுளை நினைத்துப் புலம்புதல்.

நடந்ததேன்ன சொல்லம்மா என்றமெட்டு.

இராகம்—இந்துஸ்தாஞ் தோடி—தாளம்—ஆதி

பல்லவி.

அருள்புரிவாய் சிவமே யா
ரறிவாருன் மகத் துவமே.

அநுபல்லவி.

இருளடர் வனத்திலே யிங்கங்கு மோடி
யேங்குகின்றேமனம் வாடி
அருமையாம் வழிகாட்ட அன்பாக வோடி
அடியார்கள் முன்வர லாகாதோ தேடி (அ)

சரணங்கள்.

பனிரண்டுவருஷத்துப் பஞ்சத்தி னாலே
பாதுகாத்திடும் அண்ணன் பாலே
தனையருடனே செல்லுந் ததியிலிக் காலே
தடங்தெரியாமலே தவித்தோமண் மேலே (அ)

பாதகஞ்செய்தபார்ப் பானையுங் காத்தாய்
பண்ணவரிடர்தனைத் தீர்த்தாய்
மோதகக்கரத்து முன்னோனையும் பூத்தாய்
மூவுலகத்திலெங்குந் தானாக ஆர்த்தாய் (அ)

(வ—ம்) ஏ! ஜெகதீசா! தீனரட்சகா! அடியாள் இவ்வனத்தில் வழிதெரியா தலைகின்றேனே ஆபத் காலத்திலுதவலாகாதா? மனிதசஞ்சாரமில்லாம லிருக்கிறதே ஐயோ யான் கற்பிற்சிறந்தவளாயிருந்தால் ஆர்மூலமாவது வழிகாட்டச் செய்வாய் அண்ணலே!

மதுரை நல்லண்ணமகாராஜன் இரண்டாவது சபை.

(ந—ம்) சேவகா! ஜாக்கிரதையாயிருக்கிறாயா?

(சே—ம்) மகாராஜ்! ஆக்ஞையின்படி காத்துக் கொண்டிருக்கிறேன்.

(குடிகள் வசனம்) சேவகா! குடிகள் வந்திருக்கிறோமென்று அரசனுக்குத் தெரிவிப்பாய்.

(சே—ம்) அரசே! குடிகள் வந்திருக்கிறார்கள்.

(ந—ம்) என்னகாரியம்? வரச்சொல்.

(சே—ம்) உங்களை வரச்சொல்கிறார்.

(கு—ம்) மகாராஜாவே! வந்தனம்.

(ந—ம்) கல்யாண் குடிகாள்! யாதுவிசேடமாய் வந்தீர்கள்?

(கு—ம்) பிரபு! மிருகங்களானவை நாங்களிட்ட நஞ்செய் புஞ்செய்களின் பயிர்களைத்தின் றழித்துவிடுகிறது ரட்சிக்கவேணும்.

(ந—ம்) அப்படியா? மலேக்காதீர் நான்வேட்டைக்குச் சென்று மிருகங்களைவதைத்து நலம்புரிகின்றேன் சென்றுவாருங்கள்.

மந்திரீ! வேட்டைக்குச் செல்ல வேண்டியிருப்பதால் வேடர்களைத்தருவியும்.

(ம—ம்) இதோதருவிக்குறேன் வேந்தே!

சேவகா வேடர்களையழைத்துவா.

(சே—ம்) பிரபு! இதோவேடர்கள் வேட்டைக்கோலத்துடன் வந்திருக்கிறார்கள்.

வேடர்கள் சோல் தரு.

நோட்.

அளகை நகரையரசு செய் என்றமெட்டு.

கண்ணிகள்.

வேட்டைபுரியும் வேடர்கள்
விளங்கு குறிஞ்சி நாடர்கள்
வாட்டந்தவிர்க்கு மன்னன் முன்னே
வந்தனம் வந்தனம். (வே)

அம்புவில்லு மீட்டியும்
ஆயுதம் பல மாட்டியும்
வம்பர்வம்பனு மன்னன்முன்
வந்தனம் வந்தனம். (வே)

(வே—ம்) மகாராஜா! கும்பிடுகிறோம்.

(ரா—ம்) கல்யாண் ஏ வேடர்காள்! வேட்டையாட வேண்டியதிருக்கிறது நீங்கள் அதிசீக்கிரம் வனத்திற்கு வாருங்கள்.

(வே—ம்) உத்திரவுப்படி வருகிறோம்.

(ரா—ம்) கண்மணி அலங்காரி! யான் வேட்டைக்குச் சென்று வருகிறேன் அதுவரை சகி சனங்களுட னந்தப் புரத்தி லிருப்பாய்.

(அலங்காரி வசனம்) பிராணபதி சீக்கிரம் வந்துவிடுவீர்களா?

(ரா—ம்) வந்துவிடுகிறேன்.

(அ—ம்) ஆனால் நல்லது சென்றுவாருங்கள்.

நல்லண்ண மகாராஜன் வேட்டையாடுதல்.

சாரங்கந் தன்னிலோர் சர்ப்பக்கணை தனைப்பூட்டி என்ற மெட்டு.
இராகம்—அடாணு—தாளம்—ரூபகம்.

துக்டா.

கார்முகந்தன்னிற் கனற்கணை
யொன்றினைப் பூட்டி
வெகு தாட்டி
கம்பா ராட்டி சிங்
கம்புலியானை பலமிருகவுயிர் வீட்டி விடச்
சீர்மிகுந்தக் கப்பறைதனைக் கொட்டுங்கள்
திக்குகளெல்லாம் வலைதனைக் கட்டுங்கள்
தூர்தனைத் தட்டி வெளியேவி ரட்டுங்கள்
துடியாரை நொடியிற்பெரும்
படியானத தீரவீரரே (கா)

(வ—ம்) அடா வேடர்காள்! பார்த்தீர்களா? நீங்கள் பறை முழக்கவும் காட்டினுள்ளிருந்த மிருகங்களெல்லாங் கூட்டங் கூட்டமாயோடுகிறது? இன்னும் நான்கு புறமும்போய் வெடிகளையும் கொட்டுகளையும் முழக்குங்கள் அவ்வளவும் வெளியே வரட்டும்.

(வே—ம்) மகாராஜா? அப்படியே கலைத்துவிரட்டுகிறோம்.

அரசன் சொல்லல்.

நோட்

இராகம்—பியாக்—ஏகதாளம்.

கண்ணிகள்.

அடே அடே அதோ ஓடுங்கன்றை
விடேன் விடேனென்றே வெட்டடா
விடேன் விடேனென்றே வெட்டடா
நெடியகயிற்றாற் கட்டடா (அ)

படீர்ப் படீரெனத் துள்ளுமானைத்
திடீல்த் திடீலென்றே யடியடா
திடீல்த் திடீலென்றே யடியடா
பொடிக் கொம்பிணையை யடியடா (அ)

திருக்கித்துதிக்கை முறிக்கிச் சென்றிடுங்
கரிக்கிப் பின்னே நீ செல்லடா
கரிக்கிப் பின்னே நீ செல்லடா
கருக்குவாளினாற் கொல்லடா (அ)

உக்ரமாய்த்தந்த வக்ரமோடெதிர்
நிற்குஞ் சிங்கத்தைக் குத்தடா
நிற்குஞ் சிங்கத்தைக் குத்தடா
நிக்ரகமாக வெத்தடா (அ)

(ரா—ம்) வேடர்காள்! அதோஓடுகின்ற வேங்கையை நாயைவிட்டுமறித்து துப்பாக்கியாற் சுடுங்கள் பார்க்கலாம்.

(வே—ம்) அப்படியே செய்கிறோம் பாருங்கள்.

(ரா—ம்) வேடர்காள்! இந்தப்புறம் வலையைக்கட்டிக் கலையுங்கள் உள்ளேயிருந்து மான் பன்றி முயல் முதலியது வோடிவரும் யான் எதிரேயிருந்து சுடுகிறேன்.

(வே—ம்) அப்படியே செய்யுங்கள்.

இவ்வண்ணம் வேட்டையாடிக் கொண்டிருக்கும் சமையம்நல்லதங்கை புலம்பிக்கொண்டு பாதையைத் தேடி வருதல்.

ஐம்நாகை மாரனைனு என்றமெட்டு.

இராகம்—பியாக்—தாளம்—ஆதி.

பல்லவி.

மார்க்கந்தனைக் காணிலேன் மதுரைக்கேகு
மார்க்கந்தனைக் காணிலேன்

அநுபல்லவி.

ஏக்கமுற்றலைகுறேன் ஏக்கமுற்றலைகுறேன் (மா)

சரணம்.

வருபவரெதிரே யொருவரு மிலையோ
மாநகரின்னுந் தொலையோ
மைந்தருடன் மங்கைநானென் செய்வேனே (மது)

(வ—ம்) ஐயோ தெய்வமே! வழிகாட்ட வருபவரொவரு மிலையா? யாரும் செய்யாதபாவம் யான்தானு செய்தேன்? மதுரைக்குச் செல்லுவழி தெரியவில்லையே ஆ கடவுளே! யென்செய்வேன்?

(ந—ம்) ஓ வேடர்காள்! ஆரோ ஓர்பெண் மதுரைக்கேகும் வழி தெரியவில்லையே? யான் பாவியாயிருக்கின்றேனே யென்று ரோதனம் செய்து கொண்டு வருகிருள் அந்நவள் யாரென்று விசாரித்து வருவோம் வாருங்கள்.

(வே—ம்) ஆம்பிரபு! ஆரென்றறிவோம் வாருங்கள் (நல்லதங்கையைப்பார்த்து) அம்ம! நீயார்? உன்பெயரென்ன? இக்குழந்தைகளார்? எவ்விடமிருந் தெங்குபோகின்ருய்? வருத்தமடைகின்ருயே காரணமென்ன? விபரமாய்ச்சொல் எங்களாலியன்ற வுதவி செய்கின்ருேம்.

நல்லதங்கை சொல்.

நொண்டிச்சிந்து.

இராகம்—பூரிக்கல்யாணி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

சொல்லுவேன் வேடர்களே துலக்கமாய்த்
தோகையென் வரலாற்றை வாகுடனின்று

பல்லுயிர்களைப்படைத்த பங்கயனும்
பஞ்சாயுதனுந்தேடிப் பார்த்தறியாக்

கடவுளே சொக்கலிங்கக் கண்ணுதலாய்க்
காரணியுமையேமீ னாட்சியெனவும்
இடமகல்சோயிஸ் கொண்டெ ழுந்தருளி
யிருந்தறுபத்திநான்கு திருவிளையாட்

டியற்றிய மதுரையையாண் டிருந்தமன்
னிராமலிங்கர்க்குந்தாயிந் திராணிக்குமாய்
நயத்தவ மகவுதித்தோம் நல்லண்ண
ராசமென்பவ ரொன்று நல்லதங்கைநான்

இருவரும் படித்திடவே பள்ளியி
லிட்டனர் பலகல்வி கற்றுத் தெளிந்தோம்
பருவங்கண்டண்ணனுக்குத் தகப்பனார்
பார்த்திபனுங் குந்தள தேசத்தரசன்

கோமுகன் றவத்துதித்த குமரியாங்
கோதையலங்காரியை மணமுடித்துச்
சாமுகமாகிச்சென்று ளௌ தன்னை
தமையனுக்கதன்பின் தகப்பனரசைத்

தந்திறந்திடும்பொழுதே தங்கையைச்
சரியான அரசர்க்குத் தருவாயென்றே
அந்தரம் போயடைந்தார் அதன்படி
யாயர் குலத்துதித்த மாயவனுற்ற

வடமதுரா புரியாள் காசிப
மன்னனுக் கெனைமணமுடித்துத் தந்தார்
உடலுமுயிரும்போலே யென்கணவ
னோடுவாழ்ந்திருந்தெழு மக்களைப்பெற்றேன்

இப்படியிருந்திடுநா ளேற்றபன்
னிரண்டு வருஷப்பஞ்சம் வரக்கலங்கி
ஒப்பிடுபொருளையெல்லா முலகிலே
யொவ்வொன்றாய் விற்றுத்தின்று தவ்வையடைந்து

பிறந்தவன்மனைதேடிப் புருஷனைப்
பிரியமாய்ப் போகலாம் நீர் வருவீரென்றேன்
சிறந்தவுன் புதல்வருடன் அண்ணன்மனை
சென்று சிலநாளிருந்து வந்திடுவென்றே

அனுப்பினர் புதல்வருட னப்படியே
யாகட்டுமென்று நடுக் காட்டினில்வர
தனிப்புதல்வரும் பசித்துச் சாதமுந்
தண்ணீரும் கொடுவென்றே கண்ணீரும் விட்டார்

பசித்தழு தமக்களுக்கு கொவ்வையின்
பழத்தைப்பறித்துத்தந்தேன் புசித்திடவே
அசத்தியா லோங்கரித்தே யசந்தனர்
ஆற்றிப் போற்றியிவரைக் கூட்டிக்கொண்டு

வந்தனனிடைவழியில் திசைதப்பி
மயங்கிப் பட்டினியாலே தியங்குகின்றோம்
எந்தன் சங்கதியி துவே மதுரைக்
கேகும் வழியைத் தயவாகச்சொல்லும்.

தந்தனத்தனதனனா.

இவையெல்லாம் கேட்ட நல்லண்ணன் குதிரையை விட்டுத் திடீரெனக் குதித்து புலம்புதல்.

விருத்தம்.

ஐயவோ வென்று தங்கா ஆருமில்லாதவேழைத்
தையலர் போலேபெற்ற தனயரைக் கூட்டிவந்து
வெய்யலும் பனியுங்காற்று மேவியவனத்திற்பாத
நையவந்ததென்ன வுன்றன் நாயகனனுப்பலாமோ.

அயாங்க ரோஹிதாத்தமேரி என்றமெட்டு.

இராகம்—பியாக்—அடதாளம்.

கண்ணிகள்.

சகோதரியே நீ தனியே தானேவரலாகுமா
தாரணியி லீதோர் வசைதங் கிடாது போகுமா
சகாயமிலார் போலவந்த தன்மையென்ன ஞாயமோ
தாமரைமேல் வாழ்ந்திடுவோன் தான்செய்யுமுபாயமோ

ஏந்திழையா ரோடுபல்லக் கேறிச்சென்ற கோலமே
யின்றியே கால் நோவவிங்கே யெய்தியதென் காலமே

தீய்ந்திடுமிக்கானகத்தில் சிறுவேங்கை சிங்கமே
சேனையுன்னைக் காணிலேயோ செய்திடாதோ பங்கமே.

(வ—ம்) ஆ! ஆ! என்னருமைத் தங்காய் மாசெல்வவந்தனுயுள்ள காசிபமகாராஜனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து சகல சீதனமுங்கொடுத்து ஆனைசேனை பரிவாரங்கள் சூழ, தாதியர்கள் கூட முத்துச்சிவிகைதாங்க வெகு ஆடம்பரமாய்ச் சென்ற நீ யிக்கோலத்துடன் ஏழுபிள்ளைகளையுங் கூட்டிக்கொண்டு கேவலம் யாருமில்லா அனாதைபோல கொடியமிருகங்கள் வாசஞ்செய்யுங்காட்டில் பாதசாரியாய் வந்தையே யிதுவுங்கர்மமா? இவையெல்லாம் இந்தப் பாவிபாக்கும் படியாயிற்றே யென்செய்வேன் அம்மா இப்படிக்கு வரும்படி நேரிட்ட காரணம் யாது?

நல்லதங்கை.

அண்ணா! இங்கு கல்யாணஞ் செய்து கொண் டங்கு சென்று சுகமாக வாழ்ந்து ஏழு பிள்ளைகளையும் பெற்றேன். பின்னர் பனிரண்டு வருஷமாய்ப் புவியில் மழை பெய்யாது பஞ்சம் வந்து சேர அதில் படாதபாடுபட்டும், உண்ண உணவற்றும், மிகவருந்தி கணவனையும் கூட வழைத்தேன்; அவர் நீயும் குழந்தைகளுமாய் உன் அண்ணன் வீடு சென்று பஞ்சந் தெளிந்த பின் வாருங்களென அனுப்பிவைத்தார். துணையாளின்றி வனத்தில் வரும்போது மைந்தர்களுடன் கஷ்டப்பட்டு பசியால் வருந்தி வழிதெரியாது மெல்ல மெல்ல நடந்து இவிடம் வந்து தங்களைக்கண்டோம் இதுதான் விசேஷம்.

(ந—ம்) தங்கா! இந்தத் தந்தச் சிவிகையின் மீதேறி நீயும் உனது குழந்தைகளுமாய் முன்னே செல்லுங்கள் நான் பின் வருகிறேன்.

ஷாகைவாலா தோபியாா ஸ்ரவர பாதா கையாலா என்ற மெட்டு.
இராகம்—காப்பி—தாளம்—ஆதி.

நல்லண்ணன் சொல்.

கண்ணிகள்.

தங்கையே முன்னே செல் வாயே
தனையரோ டரண் மனைக்கே நீயே

தந்தச் சிவிகை யேறிடு வாயே
தானதன்பி னேவருவே னுனதிரு லேவிளைவாய்.

நல்லதங்கை.

நங்கைநான் றனியாய்ப் போவேனு
நாத்தியார்க் கவமதிப் பாவேனு
நலமுண்டோ அதுவும்சரி தரனு
நகைபுரிவார் சிகைமடவார் சுகமில்லையே அகமகிழ்வாய்.

நல்லண்ணன்.

போனவுடன் பார்த் துபசாரம்
போஷிப்புஞ் சிரம பரிகாரம்
புரிவதுமன்றி நல் லாகாரம்
புசித்திடவுங் கொடுத்திடுவாள் விசித்திரமல் லவிப்பொழுதே.

அன்னை தந்தைய ரானுலே
யாகும் பிரிய மென் பாலே
யல்லா தவளுக் கென் மேலே
ஆமோவிசு வாசமிங்கு தாமுவரா தேயிருந்தால்.

(வ—ம்) அம்மா! தங்கா! ஒன்றும் யோசியாதே அன்னை தந்தையர் போலவும், என்னைப் பார்க்கிலும் பதின்மடங்காயும் பிரியமா யுபசரித்து, உன் பிள்ளைகளுடைய பசிகளையு மாற்றுவாள். குடிகளின் பொருட்டு வேட்டையாட வந்தேன் வந்த வேலையையும் பார்த்துவிட்டு சிக்கிரமுன்பின்னலே வருகிறேன்.

மந்திரீ! சிவிகையைக் கொண்டுவரச் செய்யும்.

(ம—ம்) இதோ வந்துவிட்டது.

(ந—ம்) அம்மா! பிள்ளைகளும் நீயுமாயேறிக் கொள்ளுங்கள்.

(ந—கை—வ—ம்) ஏறிக் கொண்டோம் போய் வருகிறோம் சீக்கிரமாய் வரவேணும்.

(ந—ம்) நல்லது போகிகாள்! பல்லக்கைக் கொண்டுபோய் நமது அரண்மனையிற் கொண்டு போயிறக்கும்.

(போகிகள்—வ—ம்) உத்திரவு.

(தூக்கிச் செல்லல்.)

அலங்காரி ஸீன்.

(அலங்காரி வசனம்) சகிகாள்! எனது பிராணேசன் வேட்டைக்குப்போனவர் இன்னும் வராதகாரணம் தெரியவில்லை மாடியின்கதவைத்திற மேலேபோய்நின்று பார்க்கலாம்.

(சகிகள் வசனம்) அம்மா! இதோ திறந்துவிட்டோம் வாருங்கள் பார்ப்போம்.

நல்லதங்காள் பல்லக்கில் வருவதைப் பார்த்து மூளிஅலங்காரி தன்சகியிடம் சொல்லுதல்.

கபா தாஹாத் என்றமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

வருகிறதைப்பார் மகிழ்வுடன்சிவிகையில்
வருகிறதைப்பார்

அநுபல்லவி.

ஒருவரு மழைத்திடா திருக்கையிலென்ன
பெருமையாமோவலிய எருமைக்கடாரிபோலிங்கு (வரு)

சரணம்.

முனமேகொடுத்தமுத தனங்கள் போருதோ
இனமெதற்கு வருகிருளே
இருக்குதோ கொடுக்கவும் இட்டபன்றிக்
குட்டிகள் போலஏழுபிள்ளை யோடிங்கு (வரு)

(வ—ம்) அடி சகி! அதோபல்லக்கின் மீது வரக்கூடியவள் யெனது நாத்தியல்லவா?

(ச—ம்) ஆம் அம்மா!

(அ—ம்) இவள் முந்தியுங்குடிகெடுத்துக் கல்யாணம்பண்ணி புருஷன் வீடுபோகும்போது என் நாயகனை ஏமாற்றி அநேகதிரவியமும் சீதனமுங் கொண்டுபோய் விட்டாளே இன்னும்எதற்குவருகிருள் என்புருஷனைப் பைத்தியகாரனென்றெண்ணி வருகிருளோ?

இதென்ன பிள்ளை யில்லாதசொத்தா? நாதிகிடையாதா? இருக்கட்டும் உள்ளேவந்து நுழைகிறதைப் பார்க்குறேன் மாடிக்கதவை மூடிவிட்டுக் கீழேவாடி. தலைவாசற்கதவையும் தாளைப்போடு சிரசில் பற்றுப்போட்டுக்கொள்கிறேன் ஆனமட்டும் பார்க்கட்டும்.

(ச—ம்) அம்மா! அப்படியே செய்யுங்கள்.

போகிகள் அம்மா! இதோ நமது மாளிகை வந்துவிட்டது.

(ந—ம்) (இறங்கிக்கொண்டு) போகிகாள்! நீங்கள் ராஜாவிடம் போய்ச்சொல்லுங்கள்.

(போ—ம்) அம்மணி! உத்திரவு.

(ந—ம்) பாலர்காள் இதுதான் உங்கள் மாமனரண்மனை வாருங்கள் உள்ளேபோகலாம். ஆ என்னவோ கதவடைத்துத்தாள்போட்டிருக்கிறது இருக்கட்டும் தட்டி அழைத்துப் பார்க்குறேன் அண்ணி அண்ணி! அண்ணி!

துக்டா.

பல்லவி.

அண்ணி அண்ணி
ஆருவீட்டுள்ளேயிருக்கிற (தண்)

அநுபல்லவி.

நண்ணியுன்றன் வீட்டுக்கு நல்லதங்கை வந்தனள்
புண்ணியங் கதவுதாள் போட்டிருப்பதைத்திற (அ)

சரணம்.

உந்தன்மருமக்களும் வந்துநிற்குறார்களே
சந்தோஷமுடன்கதவு தாளைத்திறந்திடு (அ)

நல்லதங்கை பின்னுங் கதவுதட்டிகூப்பிடல்.

கைலேஸ நாசுவதா சித்துவாங்கேரே என்றவர்ணமெட்டு.

துக்டா.

பல்லவி.

நெடுநேரவந்தே நிற்குறே ஞானே அண்ணி
நீ திறப்பாய்கதவைத் தானே

அநுபல்லவி.

என்கு மாரரேழுவரையுங் கூட்டி
யிங்கு வந்தேனுங்களுடைய · விட்டி
லுற்றென் மாநகர் நோக்கிப்பின் போவேனே அண்ணி
(நீதிறப்)

என்மே லேதும் வருத்தமுன்ன முண்டோ
கத வெப்போதடைத்தா யெனேக்கண்டோ
வர்ம மிப்படிச்செய்தா லென்செய்வேனே
அண்ணி (நீதிறப்)

எனக் கண்ணனல்லால்வேறே தஞ்சம்
யினி யாருண்டுமெண்ணிப்பார் கொஞ்சம்
பஞ்சத் தாலே கஷ்டமாகி வரலானேன் அண்ணி
(நீதிறப்)

(வ-ம்) ஏ அண்ணி! நான் நெடுநேரமாய்த் தலைவாசலில்நின்று கதவுதட்டிக் கூப்பிடுகிறது காது கேட்கவில்லையா? திறக்கப்படா தென்றநோக்கமா? கத்துவதற்கு சக்தியில்லையே குழந்தைகளும் பசியால் சோர்ந்து விழுகிறதே ஐயோ யென்செய்வேன் ஆரிட முறையிடுவேன்.

ஆலோசித்துபின்.

ஏ தெய்வமே பார்வதிரமணா! பக்தவகூலா! என்மதினியை யுரத்துக்கூவியழைத்தும் வந்து கதவுதிறக்கிறாளில்லை காரணம் இன்னதென அறிந்திலேன் பாலர்களும் பசியால் வருந்துகிறார்கள்.

வெண்பா.

பதிதனைத் தெய்வமென்று பாவித்தேனாகிற்
சதிகாரி யென்னண்ணி சாத்துங்—கதவதனைத்
தானேதிறக்கத் தயைபுரிவா யெங்கள்பெரு
மானே சிவமகதேவா.

———

நல்லதங்கை பகவத் கிருபையால் கதவுதிறக்க உட்சென்று அண்ணன் மனைவியைக் கண்டு பிரலாபித்தல்,

துனியாசாரி சபஜேனவ் ஜூட்டி என்றமெட்டு.

தக்டா.

மதினியேநீ விதனமோடே
மண்மேற்படுக்க லாவானேன்

புதிதாய்ச்சிரசில் பற்றும்போட்டே
பொருமலாகி விருப்பானேன்

பதிலொன்றும்பேசா திருப்பதின்னதெனப்
பாவிநானறியேன் வாவிவன்றே

பகர்ந்தாயில்லையிவ் விதமென்றண்ணனும்
பார்த்தார்சொலவு மில்லையின்றே

பசியால் தனையர் அழுகி றதுபார்த்
திளகா மனதா புறுவ தெனவோ (ம)

(வ-ம்) அண்ணி! என்னகாரணம் தரையிற் புழுதி படியும்படி படுத்திருக்கிறாய்? நெற்றியில் பற்றுவேறு போட்டிருக்கிறாய்? விம்மலும் பொருமலுமாய்கண்ணீர் வடிகிறது? உடம்பிற்குவருவதைச் சொல்லு வந்தவளோவா வென்றுகேட்கவுமில்லை? மருமக்களுடனாவது அருமையாய்ப் பேசவில்லை? அண்ணனாவது வழியில் பார்த்தவர் இன்ன விதமாயிருக்கிறாளென்று சொன்னாரில்லை தாதிகளோ நீங்களாவது வைத்தியம் பாக்கப்படாதா?

(தா-ம்) அம்மா! இருந்தது இருந்தாற்போல் தலையிடியுங்காய்ச்சலும் வந்துவிட்டது வந்தவுடன் பார்க்கப்படாது இனிமேல்தான் வைத்தியரைக்கூட்டிக்கொண்டு வந்து காண்பிக்கலாமென்றிருக்கிறோம்.

———

குணசீலன் தன் மாமன் மாளிகையைப் பார்த்துத் தம்பிகளுக்குச் சொல்லுதல்.

வர்ராயெனையனையத் தானே என்றமெட்டு.

இராகம்—பியாக்—ஆதிதாளம்.

கண்ணிகள்.

இந்தமாளிகையி னந்தஸ்தானதையா
னெந்தவாறுசொல்வேன் தம்பிகாள்
யிதற்கிணை யுரைப்பதற் கிருக்குதோ உலகினில்
சந்திர காந்தக்கல்லால் தளவரிசையும் செம்பொன்
தகடிசைத்த நெடுந்
தனிம்தில்களும்பள பளவென ஜொலிக்குது.
சுத்தமாமரக தத்திறைலிழைத்த
தூண்கணட்டிய தன்மேலேயே
சுயமிகுவயிரவுத் திரமதுபொருத்தியும்
பத்திபத்தியாய்ப்பவ ளத்தின்வளைபரப்பிப்
பாங்குடனே பல
பலவிதவிகசிதமுள படங்களமைத்தார்.

(வ—ம்) தம்பிகாள்! பார்த்தீர்களா நமது அம்மானரண்மனையைப்பார்க்கப் பார்க்கப் பதினாயிரங் கண்வேணும் மேல்மாடியும், அதன்மீதுமேகங்கள் சஞ்சாரம் பண்ணுகிறதும், வெகுஉன்னதமாயிருக்கிறது உள்ளேசுவர் முழுதும் சித்திர மெழுதியிருக்கிறது. ஹாலுக்குத் தகுந்த லஸ்தர் குலோப்பர்கள் மாட்டியிருக்கிறது என்ன அலங்காரம்?

தனசீலன்.

ஆம் அண்ணா! நம்மவீடுகூட இதுபோலஇல்லை யல்ல? ரெம்ப நல்லாத்தானிருக்கிறது

யூகசீலன்.

அண்ணா! இந்தமூலையில்ரெம்ப தேங்காய் கொட்டிவைத்திருக்குது பார்த்தியளா? இதெல்லாம் எதற்காகவாங்கி இருக்கிறாக?

சத்தியசீலன்.

அண்ணு? இந்தமூலையில் பார்த்தியா மாங்காய் குமித்திருக்குது அதையெடுத்து தின்னலாமா?

புண்யசீலன்.

அப்பப்பா அதெல்லா மிருக்கட்டும் பசிரெம்ப இருக்கிறது. நமது மாமியாரும் அன்னையும் சாதம்வைத்துக் கொண்டுக் காத்திருப்பார்கள் வாருங்கள் போய்ச்சாப்பிடலாம்.

நல்லதங்காளுக்கும் மூளி அலங்காரிக்கும் தர்க்கம்.

தங்கநிற மேனியுள்ள என்றமெட்டு.

இராகம்—நீலாம்புரி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

ந அண்ணி அண்ணி அண்ணி அண்ணி
அண்ணியண்ணி யென்னுடைய
அண்ணனுக்கிசைந்தமண வாட்டி

மூ எண்ணியேபாராமலேவந்
தென்னையேனெழுப்புறாய் கா மாட்டி

ந உந்தன் மருமக்கள்பசி
யுற்றழு கிறரே மனம் வாடி

மூ தொந்திரவு செய்யவேண்டாம்
சொல்லாமலே வந்தவழி போடி

ந மாக்கொடிய பஞ்சமதால்
வந்தோ முந்தன் மாளிகையைத் தேடி

மூ போக்கில்லாமல் வந்ததற்குப்
பூவைநா னென்செய்குவண்டி போடி

ந பாலருக்கி ரங்கி முகம்
பார்த்துக்கொஞ்ச மன்னந்தரு வாயே

மூ கேலியோடி சாதமில்லை
கேழ்வரகிருக்குதறி வாயே

வாரிதநு பனஜோபநு என்றமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் பியாகு—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

ந அண்ணிய ரே யெந்தன் அண்ணிய ரே
அண்ணனேயேமணந்தவ ளே
சுகம்தந்தவளே இங்குவந்தவ ளே
மூ தலைவலியாலே சயனித்தகா லே
தட்டியெழுப்பவந்த மட்டி நீயா ரு
ந நல்ல தங்காளென்பே ரு
மூ அதற் கென்ன நீகூ று
ந சற்றெ மூந்து நீபா ரு
மூ வந்த தென்னகாரணம்
ந மைந் தர்பசிதீ ரு
மூ சாத மொன்றுமில்லை யே
ந சமைத் திடவும் சொல்லை யே
மூ கேழ் வரகிருக் குது
ந ஏழ்மக்கள் துடிக் குது
மூ துடித்தா லென்ன ஆ வது
ந தூடரும் பாவம் போ காது.

நல்லதங்கைவசனம்.

அண்ணி! கோபிக்கவேண்டாம் என்னவோ காலகெதியிப்படி வந்துவிட்டேன் மைந்தர்களோ பசியால் வாடுகிறார்கள் அந்தக்கேழ் வரகு மாவையாவது கொடு அதைப்போட்டுக்கிண்டி யாவது பசி யாற்றுகிறேன்.

மூளிஅலங்காரி.

அடி சகி! இதென்ன சங்கட்டமா யிருக்கிறது தொலைஞ்சு போவாளுக்கு அந்தப் பானையிலிருக்கிற கேழ்வரகை யெடுத்துத் திரிச்சுக்கொடுத்துத் தொலைச்சுவிடு தின்னுவிட்டாவது பாழும் பக்கிகளுடன் தொலைஞ்சுபோகட்டும்.

தாதி.

அம்மா! திரிச்சாச்சு போட்டுக் காய்ச்சுவதற்குப் பானையும் விறகும் வேணுமே யென்னசெய்கிறது?

அலங்காரி.

அடி சகீ! அந்த அறையிலிருக்கிற பானைகளில் ஏதாகிலும் கழித்த ஓட்டை தாட்டையொன்று யெடுத்துக்கொடு, கொல்லையி லிருக்கிற வாழைமரங்களில் கொழுத்ததாய்ப் பார்த்து ஒருதண்டு முறித்துக் கொடு வேகவைச்சுத் தின்னுக்கொண்டு போகட்டும்.

தாதி.

அம்மா! பானை, மாவு, விறகு, எல்லாமிருக்கிறது கிணற்றில் தண்ணீரெடுத்து உலைவைத்துக் காய்ச்சிக் குடிச்சுவிட்டுப்போ.

நல்லதங்கை ஓட்டைப் பானையில் கேழ்வரகு மாவைப் போட்டு அடுப்பேற்றி வாழைத் தண்டை முறித்து எரிக்குதல்.

உன்னைவிட்டு எவ்வாறுய்வேன் என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

கேழ்வரகு மாவு தானே
கிண்டுகின்றேன் கூழை நானே
தாழ்வெனக் கிவ்வாறு வந்த
தன்மை யறியேனே யிந்த.

விண்டுபோன பானை தந்தாள்
விறகு வாழைத் தண்டு தந்தாள்
மண்டுபுகைகண் விழிக்க
மாட்டலேமனஞ் சுழிக்க.

வெண்பா.

கற்புத்தீ யாலே கனவாழைத் தண்டெரிந்து
பற்பமாய்ப் போகவருள் பண்ணுவாய்—தற்பரனே
முப்புரத்தைச் சுட்ட முதல்வனே தப்புளதேல்
இப்புரத்தைச் சுட்டிடுவா யின்று.

வசனம்.

ஏ ஜெகதீசா! யான்கற்பகலாத காரிகையாயிருந்தால் என்னுடைய கற்புத்தீயாலே யிந்தபச்சை வாழைத் தண்டெரிந்து பற்பமாகும்படி கிருபைசெய்: இல்லையேல் அதில்குற்றமிருந்தால்இந்தத் தேகத்தையே திரிபுரத்தை யனலாக்கியதுபோ லனலாக்கிவிடுவாய்.

———

நல்லதங்கையின் கற்பின் மகிமையால் வாழைத் தண்டெரிந்து கூழ்வேகும்போது அண்ணன் மனைவியை மொட்டைக் கூழாயிருக்கிறது கொஞ்சம் குறுணை கொடு வென்று கேட்குங்கால் ஏண்டி யுனக்கு புண்ணியத்திற்கு மாக்கொடுத்தால் லெட்சணத்துக்கு குறுணைவேறேயா வென்று அடுப்பிடிலிருந்த கூழ்ப் பானையை தூக்கி நல்லதங்காள் தலையி லுடைத்தல்.

(ந—ம்) அண்ணி! இந்தக்கொடுமைசெய்யலாமா? கடவுளுக்குத் தானேற்குமா? வேண்டாம் (மேலில் வடிந்த கூழைத் துடைத்தல்)

பூகசீலன்.

அண்ணா! அதோகுமித்திருக்கிற தேங்காயில் ஒருகாயெடுத்து வாரேன் நில்லு.

———

யூகசீலன் தேங்காயெடுத்தவுடன் அலங்காரி ஓடிவந்து கையைத் திருகிப் பிடுங்குதல்.

மருவினுலேன்சேன்மம் சாபல்யமாதும் என்றமெட்டு.

இராகம்—மோகனம்—அடதாளம்.

கண்ணிகள்.

மூ ஏச்சிக்களுதைகாள் தேங்காயைப் போடும்
திரும்பிப் பாராமல் வந்தவழி ஓடும்
காச்சுபூச்சென்று கடிநாய்போல் கத்துறீர்
காரியந்தெரியாமல் வீட்டையே சுற்றுறீர்.

யூ ஒருகாயினுலென்ன குடி கெட்டுப் போச்சு
ஒழுங்காப்பேசாமலே யீதென்ன பேச்சு
திருகுகிருய்க் கைதனே வருகிருய் சண்டைக்குச்
சினந்துபேசாதே வரோமுந்த னண்டைக்கு.

மூ காயொன்றுதானது கேளாம லெடுத்துக்
காணுமற்போகவே துணிந்தீரே யடுத்துத்
தாயின்வயிற்றிலெப் படியிருந்தீர் களோ
சற்றிருந்தாற்பொத்து வராதிருப்பீர் களோ.

யூ தாய்பிறந்திட்டவீடானதி லே
தயிரிய மாயெடுத்தோ மெங்கள் மேலே
நாய்பேயென்றே கோபங் கொள்ளாதே மாமியே
ஞாயமில்லே கூலிதான்தரும் சாமியே.

மூ மாதாவைப் போலவே மக்கள் பிறந்தீர்
மழுங்கலாய்ச் சோறு சேரென்றே பறந்தீர்
ஏதாகிலுங் கிணறில்லேயோ வீழ்ந்திட
இறக்காமலிருந்திட வேணுமா வாழ்ந்திட.

நல்லதங்காள்வசனம்.

அடாமைந்தர்காள்! மாமியாரைக்கேட்டெடுக்காததினு லல்லவா உங்கள் கையைத்திருகிப்பிடுங்கிப் போடும்படியாச்சு மாமிக்காவது சிறுகுழந்தை தானே தெரியாம லெடுத்து விட்டது போனுற்

போய்விட்டுப் போகிறது என்ற எண்ணமு மில்லை இரக்கமு மில்லை
சீ சீ தூரப்போங்கள்.

நல்லதங்காள் அலங்காரியைப் பார்த்துச்சொல்லல் தர்க்கம்.

சையாரே அமரேக்து என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

வையாதே அண்ணியே நீ வையாதே அண்ணியே
மருமக்க ளெடுத்தார்
வந்தொருகாயிலேகு றைந்தென்ன போய்விடுமோ. (வை)

அலங்காரிசொல்.

ஜில்மேலு ஜில்பை ஸையா என்றமெட்டு.

இராகம்—பியாக்—தாளம்—ஏகம்.

கண்ணிகள்.

போடிபோ காயொன்றுதான் போட்டுக் கிடக்குதோடி
ஓடிக்கேளா தெடுக்க உன்மத்தமென் வந்ததடி. (போ)

நல்லதங்காள்.

செய்யாதேவஞ்ச மண்ணி செய்யாதே வஞ்சமே
தேங்கா யாயிரத்தில்
சிறிதாயொன்று கொடுத்தாற் சேதந்தானென்னவோ. (வை)

அலங்காரி.

சிறிதும் பெரிதுமாகச் சேர்த்திங்கே வைத்திருக்கோ
அறிவற்றுப் பேசவேண்டா மாரோசம்பாதித்தது. (போ)

நல்லதங்காள்.

அன்னைதந்தையர்க்குப்பி ளண்ணனுதரவே
யறிகுவாயண்ணியே
ஆனதாற் பாத்தியங்கொண் டாடவந்தோ மிங்கே. (வை)

அலங்காரி.

முன்னமனேகபொருள் மொய்திட்டழுதோமடி
இன்னமெடுத்துச் செல்ல இங்கென்னவிருக்குதடி. (போ)

நல்லதங்காள்.

பின்னேயுங்கொண்டு போக உன்னிடம் வல்லேயே
பேசியே சாதே நீ
பேதமையானபஞ்சம் போய்விட்டாற் போகிறோம். (வை)

அலங்காரி.

பஞ்சமே வந்த தென்றாற் பாழுங்கிணறில்லே யோடி
மஞ்சரைத் தள்ளிவிட்டு மாளலாந் தானு மடி. (போ)

அலங்காரி வசனம்.

ஆமடி எவளவு தானிருந்தாலும் சும்மா கிடக்கிறதா? முன்ன மேகொடுத்தழுததெல்லாம் போருதா? வெட்கமில்லாமல் பஞ்சம் வந்திருக்கிறது பிழைப்புக் கிடமில்லே யென்று வந்திருக்கிறாய் பாரு இதுவுமொரு பிழைப்பா? இந்தப்பிழைப்புக்கு ஒருபாழுங்கிணறு பார்த்துப் பிள்ளேகளும் தானும் இறங்கிவிட்டால்? இந்தச்சென்மம் வைத்திருக்க வேணுமா? போடி போ பிள்ளேகளேக் கூட்டிக் கொண்டு.

நல்லதங்காள்.

அண்ணி! பஞ்சத்தால் பட்டபாதரவுபோதாது உன்வீட்டிற்கு வந்ததற்கு கிணற்றிலேயும் விழுந்து சாகவா சொல்கிறாய்?

அலங்காரி.

ஆம் தான் வந்தாலும் போருதென்று ஏழு பிள்ளேகளேயும் வதவதவென்று கூட்டிக் கொண்டுவந்ததற்கு அப்படித்தான் செய்ய வேணும்.

நல்லதங்காள் சொல்லுதல்.

இன்ன மிரக்கமில்லேயா என்ற கீர்த்தனே வர்ணமெட்டு.

தர்க்கம்.

இராகம்—தேசிகத்தோடி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

இப்படியும் பேசலாமா அண்ணியே நீ

சென்னை-600 005.

அநுபல்லவி.

கப்பிய பசியினாலே கதறியேமைந்தரழக்
கண்டுமன மிளகாமல் இளகாமல் இளகாமல் (இ)

அலங்காரி சொல்லல்.

அச்சாமேரி லாஹோ என்றமெட்டு.

இராகம்—இந்துஸ்தான்தோடி—ஏகதாளம்.

பல்லவி.

பேதையே நீ பேசாமற் பிள்ளைகளைக் கூட்டிப்போ

அநுபல்லவி.

தந்தைதாயாரு மில்லைத் தமையனாரிங் கேயில்லை
தங்காமல் தங்காமல் தங்காமலே (பே)

நல்லதங்காள் சொல்லல்,

சரணங்கள்.

நாயகனுடன்பிறந்த நாத்தியென்றும் பாராமலே
வாயில் வந்த படியெல்லாம் படி படி (இப்)

அலங்காரி சொல்லல்.

சரணங்கள்.

பேசினதாலே யென்ன பெலன்கெட்டுப்போனாயடி
தோஷியே தோஷியே தோஷியே சீ (பே)

நல்லதங்காள்.

அண்ணன்வீட்டின் றேவந்ததற் கவமரியாதையெல்லாம்.
பண்ணிவைத்தா யநியாயம் அநியாயம் அநியாயம் (இப்)

அலங்காரி.

இந்த மட்டும்போகாம லின்னும் செய்வேன் வரிசை
யிருந்தாலே யிருந்தாலே யிருந்தாலே தான். (பே)

அலங்காரி வசனம்.

சீச்சீலவண்டி! இந்தமட்டும் தானா மரியாதை? இன்னுமிருக்கிறது வெட்க மில்லாமல் பிள்ளைகளையு முன்னேவிட்டு தானும்

வந்துவிட்டாயே? ஊரிலேபஞ்சம் வந்தால் நாங்களாபிணை, விருந்து மருந்து மூன்று நாள் தானென்பதறியாமல் பஞ்சந் தீர்ந்து போவோமென்கிறாயே சுனையில்லை? என்புருஷன் பைத்தியகாரனென்றா யெண்ணிக்கொண்டனை?

நல்லதங்கை.

அண்ணி! பிறந்த வீடென்றும், அண்ணனிருக்கிறாராதரிப்பாரென்றும் எண்ணிவந்தேன் இப்படியெல்லாம் நீ பேசுவாயென்றறிந்தால் வாராதிருப்பேன் இருக்கட்டும் பசிக்கிற குழந்தைகளுக்குக்கொஞ்சம் சாதம் போடு.

அலங்காரி.

ஆரடிநீங்கள்? ஒன்றா? இரண்டா? ஏழுபிள்ளைகளுக்குச் சோறுபோட எங்கேபோகிறது? வீட்டைகுட்டிச்சுவராக்கி விடுவீர்கள் போலிருக்கிறதே சரிதான் போய்வாருங்கள் நஞ்சை விளைந்து வரட்டும்.

நல்லதங்காள்.

அம்மா! இந்தப்பச்சைக் குழந்தைகளுக்கு ஒவ்வோர்பிடிசாதம் கொடுப்பதற்கு நஞ்சையா விளைந்து வரவேணும்? யென்னுடைய அண்ணனில்லாததாலே யல்லவா இப்படிச் சொல்லுகிறாய்?

அலங்காரி சொல்லல்.

தாரதிலாயா தில்பரியா என்றமெட்டு.

இராகம்—பியாக்—தாளம்—ஆதி.

பல்லவி.

அண்ணன் வந்தாலென்ன செய் — திடுவார்
அரிவையே யுன்னைத்தான் வை — திடுவார்

அநுபல்லவி.

எண்ணாமல் வீட்டினு ளிருக்கவைத்ததினாலே
இகழவந்தா யென்னை யிகழ வந்தாய். (அண்)

சரணம்.

உடனிருவரும் பிறந்திடும் போது
குடலறுந்து போனதோ யடி யோது
துடிதுடித் தவர்வந்த வுடனே நீயு மைந்தருஞ்
சொல்லிடுவீர் நீங்கள் சொல்லிடுவீர். (அண்)

நல்லதங்கை.

அம்மா! அண்ணன் வந்தவுடன் நாங்கள் சொல்ல வேண்டாம் அந்தச் சொல்லைக்கேட்டுக் கொண்டு உன்னைத் தொந்திரவும் செய்ய வேண்டாம்.

"தான் கெடினுந் தக்கோர் கேடெண்ணற் கத்தனுடம்பி
னூன் கெடினுந் துன்றூர்கை யுண்ணற்க"

யென்ற வாக்கின் படி செல்கிறோம் நீயாயிருந்து சாம்பேரது கூடவே சுமந்து கொண்டுபோ யாங்களலைந்து போவது போல நீ போவதற்கு நாட்செல்லுமா? கடவுளிருக்கிறார் வினைவிதைத்தவர் வினையறுப்பார் தினைவிதைத்தவர் தினையறுப்பார் நன்றாயிருந்தால் சரி.

அடாகுழந்தைகாள்! வாருங்கள் போகலாம்.

மைந்தர்கள்.

தாயே! இங்கென்ன விருக்கிறது புறப்படவேண்டியது தான் வாருங்கள்.

நற்குலசேகரி என்னும்

நல்லதங்காள் சரித்திரம் முதல் பாகம்

முற்றிற்று.

உ

பரமபதிதுணை.

புதிதாயச்சிட்ட டிராமா

சரித்திர விளம்பரம்.

சுந்தரராவ், ஜெகநாதநாயுடு, ரெங்கசாமி ஐயங்கார், நடத்தி வந்து பின் செகன்மோகன குப்புசாமி முதலியார், வி கன்னையா கம்பெனியார், ஆலந்தூர் கம்பெனி அரங்கசாமி நாயுடு, கே. ஜி. தாரா குப்புசாமி நாயுடு, ரத்தினசாமி நாயுடு, அரங்கநாயகி, இராஜாமணி, உலகப்பிரசித்திபெற்ற வி. எஸ். சின்னமகாதேவ ஐயர் முதலியோரால் நடத்தி வருகிறதும், பார்ஸீ இந்துஸ்தான், கெஜல், டோம்ரி, ஜாவளி, திருப்புகழ் காவடிச் சிந்து தில்லானா, முதலிய புது வர்ணமெட்டுகளிலமைந்ததும் இதுவரை அச்சிட்டு வெளிவராததுமான

பார்ஸீ நூதன
பவள்க்கொடியாள் சரித்திரம்.

இதில்:--அல்லிதர்பார், அல்லிக்கும் அருச்சுனனுக்கும் தர்க்கம், பார்த்தன் புலந்திரனுக்குப் பவளத்தேர் கொண்டுவரப்போதல், பவளவனத்தில் அருச்சுனனுக்கும் கிருஷ்ணனுக்கும் தர்க்கம், அர்ச்சுனன் பவளக்கொடியைக் கண்டு மோகித்து அவளைத்திருமணம் முடித்துவைக்கும்படிக்கிருஷ்ணனை வேண்டல், கிருஷ்ணன் அருச்சுனனுக்குப் பவளக்கொடியைத் தந்திரமாய் மணமுடித்துவைத்தல், கலியாணம் நடந்ததைக் கேள்வியுற்று அல்லி அருச்சுனன்பேரில் கோபாவேசமாய்ச் சண்டைக்குப் புறப்படல், பின் அமருக்கு வந்த அல்லியைக் கிருஷ்ணனுபாயத்தால் சமாதானம் செய்தல், இவையெல்லா முதற்றுடங்கி முடிவுவரை வீரரசமிகுதியைக்காட்டும், இதன் விலை அணா—3

பார்ஸீ நூதன
தேசிங்குராஜன் சரித்திரம்

இதுவும் மேற்காட்டிய ஆக்டர்களல் நடத்துகிற சரித்திரம் மேற்கண்ட வர்ணமெட்டுகளாலமைந்தது. இதில்—செஞ்சிக்கோட்டையை ங்கநாதருடைய திருவருளாலரசாட்சி செய்துவந்த தேசிங்குராஜன் வலோகத்திலிருந்து வந்த குதிரையைச் சவாரி செய்வதும், ஆர்க்காடு நவாப்புடன் வெகு ஆடம்பரமாய் சண்டை செய்தது வரை விரிவாய்ப்பாடியிருக்கிறது இதன் விலை அணா—3½

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு நேரிலும் வி-பி மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

மு. கிருஷ்ணபிள்ளை.

பி. நா. சி. ஏஜண்டு,

புக்ஷாப், மதுரை.